07

2864
2824

கன்னிகாரத்னம்

அர்ச்சிஷ்ட

பிலோமினம்மாள்.

(தமிழ் நாடகம்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1938
MADRAS

BY
P. M. Sundaram Pillai
of
KULITALAI.

MARUTHI PRINTING WORKS,
KULITALAI.
1938.

All rights reserved] [Price As. 8.

கன்னிகாரத்னம்
அர்ச்சிஷ்ட

பிலோமினம்மாள்.

(தமிழ் நாடகம்.)

2824

குளித்தலை P. M. சுந்தரம் பிள்ளை அவர்களால்
இயற்றப்பட்டது.

894.8112

இஃது
திருச்சி உலக ரெக்ஷகர் கோவில்
பங்கு குருவானவர்
சங்கைக்குரிய J. மரியலூரயிஸ் சுவாமி அவர்கள்
முன்னிலையில் 25—12—37-உயன்று
திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில்
நாடகமாக நடிக்கப்பெற்று அரங்கேற்றம் செய்யப்பட்டது.

குளித்தலை மாருதி பிரிண்டிங் ஒர்க்ஸில்
பதிப்பிக்கப்பட்டது
1938.

காப்பி ரைட்]

[விலை அணா 8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 APR 1938
MADRAS



St. PHILOMENA

VIRGIN MARTYR & WONDER WORKER

Dedicated

TO

The Memory of My Late Beloved Parents

S. Ponnusamy Pillai,

Maria Barbara Ammal,

AND

My Late Eldest Brother,

P. M. Diraviam Pillai of Madura.

FOREWORD
BY
M. R. Ry., P. A. ANTONY Avl., M. A.,
TOWN SUB-MAGISTRATE,
TRICHINOPOLY.

Mr. P. M. Sundaram Pillai of Kulitalai is a pioneer in the field of Catholic action by means of concerts and Dramas. Some months ago he gave very interesting concerts in Trichy and Golden Rock on the life of St. Philomena. On 25-12-37 he staged a drama in honour of this Saint and it was greatly appreciated by the public. He has now published this in the form of booklet for the benefit of a wider public. I have great pleasure in commending this booklet to the public especially to all Catholics of Tamilnad. The Drama is written in simple but elegant Tamil and is interspersed with a number of songs, in choice, modern tunes. With a plot which is at once elevating and tragic, it deserves to rank high as a work of art and literature.

Drama has, far long, been the most popular form of instructions. The secret of its success lies in the fact that it appeals to all the higher sentiments and faculties of man by a judicious combination of song, word and action and a background of attractive scenery. Mr. P. M. Sundaram Pillai deserves well of the public and I wish him a fruitful career in this new field of catholic action.

TRICHINOPOLY.
10—4—1938

Sd. P. A. ANTONY.

MADRAS 1938 BOOKS

Preface.

To fulfil my vow to St. PHILOMENA, I undertook to write this Drama with a view to spread the piety and faith on the Virgin Saint. To attain this object, all the books dealing with the Saint were perused and materials gathered for the purpose. Since the book is written in the form of a Drama its style and expressions are adopted as seen and used in the daily walks of life to bring forth the reality of the play and to suit the taste of the theatre going public.

Before the book was published, this Drama was staged once in the "Municipal Public Hall, Trichinopoly" by the Amateur actors of Kulitalai and the Drama was enthusiastically well appreciated and received by the public. This encouraged me to enter in the bold attempt of publising this book for the benefit of the Catholic action. Eevery true Christian will find in the life and teachings of the Virgin Martyr, St. Philomena, many ideals to be copied and followed in actual life. These ideals will guide him in all walks of life. St. Philomena's simplicity, piety and her devotion to our Lord Jesus Christ, are all things which one could expect from a true Catholic. Her life is a model for all Christians and for all time to come.

In bringing forth this book to the public, I am very much indebted to M. R. Ry. P. A. Antony Avl., M. A., Town Sub-Magistrate, Trichinopoly, for the valuable services rendered to me, in connection with the preparation of this work as well as in staging this Drama for the first time in the Municipal Public Hall, Trichinopoly. It is

mainly due to his sincere efforts and the kind help of Mr. L. Maria Antonisamy Chettiar, Vaccinator, Trichy Dt., this work came into existence and was staged. May God bless them and their families with health and happy days in the years that lie before them.

This is my first attempt to write a Drama of this kind and my short-comings may be excused by the generous public.

In conclusion I have pleasure in tendering my sincere thanks to my fellow actors and all other friends who co-operated with me for the successful staging of this Drama.

My sincere thanks are also due to the Proprietor, Maruthi Printing Works, Kulitalai. and all the members employed in the press, who spared no pains to work in and out of office hours to complete the work of printing etc. within the limited time they had before them in the midst of so many other work.

THE AUTHOR.

Both amateurs and professionals are strictly warned not to stage this play without obtaining my previous permission.

சபா நண்பர்களும், தொழில் முறையில் நாடகம் நடத்துபவர்களும் மற்றும் யாவரும் என்னுடைய முன் அனுமதி பெறாமல் இந்நாடகத்தை நடத்தக்கூடாதென்று இதனால் எச்சரிக்கப்படுகிறார்கள்.

P. M. SUNDARAM.

All communications to:—

P. M. SUNDARAM PILLAI,

C/o MARUTHI PRINTING WORKS,

Hospital Road, KULITALAI.

நாடக பாத்திரங்கள்.

தியோக்லேஷியன்	—	ரோமாபுரி சக்ரவர்த்தி.
கலிஸ்தோஸ் பிரபு	—	கிரீஸ்தேசச் சிற்றரசன்.
பிலோமினம்மாள்	—	கலிஸ்தோஸ் பிரபுவின் புதல்வி. (கதாநாயகி)
பத்மினி	—	கலிஸ்தோஸ் பிரபுவின் மனைவி.
தேவமாதா	—	மோக்ஷராக்கினி.
அருளானந்தர்	—	கலிஸ்தோஸ் பிரபுவின் அரண்மனை வைத்தியர்.

பிரதானிகள், ஓடக்காரர்கள், தூதர்கள் முதலியோர்

கன்னிகாரத்னம்

அர்ச்சிஷ்ட

பிலோமினம்மாள்.

கோரஸ். (ஸ்ரீ நாமுரஹரி - என்றவர்ண மெட்டு.)

தேவசுதனை யீன்ற செல்வ தாயே
சேவடி நீயே சேயருக்காவாயே (தேவ)
ஆவல் கொண்டோ முனை அன்றிவேராரணே
அஞ்சலி தாளிணைக் கெஞ்சி மன்றாடினோம். (தேவ)

சீன் 1. தியோக்லேஷியன் தர்பார். (ரோமாபுரி)

தியோக்:— மந்திரிகாள்! நமது ஆட்சிக்குட்பட்ட சகல தேச சிற்றரசர்களும் இன்னும் மற்ற சகலகோடி ஜனங்களும் எனது ராஜகட்டளைக்கு அடங்கி, ஒடுங்கி ராஜப்பிரமாணத்தோடு இச்சிம்மாசனத்தை வாழ்த்துகின்றார்களா? தவிரவும் அச்சம், பயம் முதலிய நற்குணங்களோடு நான் செலுத்தும் ராஜரீகத்தை அவமதிக்காது என் ஆட்சிக்குட்பட்ட ராஜ்யத்திலுள்ளோர் அனைவரும் நடு நடுங்கி ராஜத்ரோகமின்றி நடக்கின்றார்களா?

மந்திரி:— அண்ணலே! எவ்விதக்குறைவுமின்றிச்சகலமும் செவ்வனே நடந்துவருகின்றன, சக்ரவர்த்தி அவர்களின் கடுமையான உத்திரவுக்கு எவ்விதக்குந்தகமும் இல்லாமல் பிரஜைகள் யாவரும் மரியாதையுடனும், ராஜவிஸ்வாசத்துடனும் நடந்து கொள்ளுகிறார்கள்.

தியோ:— சந்தோஷம் அமைச்சரே! அதிருக்கட்டும் நமது தேசத்தைப் பாழாக்கப்பிறந்த கிறிஸ்துமதம் இன்னும் தலைதூக்கி நிற்கின்றதா? அதை நசுக்கிக்கசக்கி சாம்பலாக்கும்படியான ஏற்பாடுகளெல்லாம் நான் செய்துவந்தும் ஒன்றும் பயன்படாமல் போகின்றதல்லவா? அந்தக்கொடிய மார்க்கத்தைத்தழுவி நிற்கும் ஒவ்வொரு ஜீவனையும் ஈவிரக்க மின்றியக்திரச்செக்கிலிட்டு சக்கை சக்கையாய்ப்பிழிந்து அம்மதத்தை அறவே ஒழிக்க முயலுங்கள். பாபம், பரிதாபம் என்னும் குணம் கிஞ்சித்தும் காட்டாது உங்களுடைய முழுத்திறமையையும் காட்டி அதற்கென ஏற்படுத்தப்பட்ட யந்திரங்களையும் ஆயுதங்களையும் பிரயோகம் செய்யுங்கள் கேவலம்! மனுஷ்ய ஜன்மத்தில் ஈனனுயிருக்கப்பட்டவன் அனுசரிக்கும் கிறிஸ்துமதத்தை என் பரிசுத்த தேசத்தில் புகுத்தினார்களல்லவா? இதனாலன்றோ என் முன்னோர்களின் ஆட்சிமுறையிலும், மாக்ஸீமியன் அரசாங்கத்திலும் அந்தரங்கமாய் ஜீவித்துவந்த கத்தோலிக்கர்களான போர்வீரர் — சிபஸ்தியார், அக்னேஸ், செசிலி முதலிய சகலரையும் தலையெடுக்கவொட்டாது வதைத்து ஒழித்தார்கள். அப்படிக்கிருந்தும் இன்னும் இம்மார்க்கமானது சத்திய வேதமென்றும், சன்மார்க்க வழியென்றும், நல்லொழுக்க முறையைக்காட்டும் மதமென்றும், அமைதி, அடக்கம், தெய்வபக்தி முதலியன சிறந்து விளங்கும் நன்னெறிப் பீடமென்றும் பிதற்றிக்கொண்டு மேல்கிளம்பியே வருகின்றது. இன்னமும் இதை அறவே ஒழிக்க நாம்முயலாதிருப்பது நீதியோ? அமைச்சர்காள்! என்ன யோஜிக்கின்றீர்கள்? எனக்குத்தகுந்த பதிலளிக்காது விழிக்கவோ என் முன் மந்திரிகளென அமர்ந்திருக்கின்றீர்கள்? தேசத்தில் ஊடாடும் தப்பறையான ஓர் காரியத்தைப் பிடுங்கி எறிவது உங்கள் கடமையல்லவா?

மந்:— பிரபோ! தாங்கள் மொழிந்தன யாவும் உண்மையாயிருப்பினும் இதற்காகத்தாங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. "முயற்சி மெய் வருத்தக் கூலிதரும்," என்றபடி நமது

முயற்சிகள் ஒன்றும் வீணுகவில்லை. அந்த எளிமைத்தனமாகிய கிறிஸ்துமதத்தை அறவே ஒழிக்க எவ்வளவோ ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அந்த மார்க்கத்தைத்தழுவும் பாமர ஜனங்களைப்பிடித்துச்சித்ரவதை செய்வதற்காக ஏற்பட்ட நமது ஸமஸ்தான வேலைக்காரர்களும், யந்திரங்களும் ஓய்வுற்றிருக்கவில்லை. பெரும் புயற்காற்றுபோல் மதம் பிடித்து அலைகின்ற அந்தப் பேய்களைப் பிடிதது யந்திரங்களில் கட்டிக்கசக்கிப் பிழிந்துகொண்டிருக்கின்றோம். ஆகையால் அந்த மதமானது இனித்தலை தூக்காது ஒழிந்துபோகும்

தியோ:— பாட்டு

மகாசுகிர்த ரூப சுந்தரி - எ. வ. மெட்டு.

சபாஷ் அருமையான மந்திரிகாள் மதி
தயங்கிடா மயங்கிடா துடங்குவீர் சகலமுந்ததி (சபாஷ்)
சுபதவ நெறி யெனும் பறை தூற்றியே விஷமூட்டுவோர்
சுகிர்த புனித வழியென மதத்வேஷமதனைக் காட்டுவோர்
கபட மனது காட்டும் அந்தக்கசடரைப் பிடித்தாட்டுங்கள்
கனவிலுமது அற வோட்டுங்கள். (சபாஷ்)

பேஷ்! மிக்க சந்தோஷம். பிரதானிகளே! அதுதான் சரி. இனி நான் இவ்விஷயத்தில் கவலையுற வேண்டிய அவசியமிருக்கென்றே நினைக்கின்றேன். நான் சென்று வருகின்றேன்.

சீன் 2. கிரீஸ் தேசம். (அரண்மனை மண்டபம்)

(கலிஸ்தோஸ் பிரபு ஓர் ஆஸனத்தில் அமர்ந்து ஆழ்ந்து யோஜித்துக் கொண்டிருத்தல்.)

கலிஸ்:— ஹே ஜெகத் ரக்ஷகா! உம்முடைய அருளாலும், என் முன்னோர்களின் ஆசிர்வாதத்தாலும், நான் ராஜ வம்சத்தில்

பிறந்து ராஜரீகம் செலுத்தும்படியான பாக்யம் பெற்றேன். அவ்விதம் நான் அடைந்த பதவியைப் பழுது படுத்தாது நல்லொழுக்க முறையிலும், நன்னெறியிலும், எனது புத்தியைச் செலுத்திக் "குடிகளின்றிக் கொற்றவனில்லை" என்னும் பழமொழியை உணர்ந்தவனாய் என் பிரஜைகளையும், சமஸ்தமத தேவாலயங்களையும் நன்கு கவனித்து நீதி வழுவாது செவ்வனே அரசாட்சி செய்துவருகின்றேன். அதுமட்டுமின்றி மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாவித்து பஞ்சம், படை, நோய் முதலியனவால் பீடிக்கப்பட்டு வருந்தாது என் ஜனசமூகத்தைக் கண்ணிமை போல் காத்துவருகின்றேனே! எண்ணிறந்த சுகபோக சிலாக்கியமும், ஏராளமான திரவியமும் எனக்கு அளித்தும், பெருங் குறையொன்றை வைத்திருப்பது நீதியோ! ஹே கருணாநிதே! காணாப்பொருளாகிய நீ என் கவலையை ஆற்ற உன் சித்தம் இறங்கலாகாதா! என் ஜென்மம் ஈடேறக்கூடாதா? இகபரம் எனக்குக்கிட்டாதா? பரம்பொருளே! (மந்திரிபிரவேசம்)

மந்:— பிரபோ! என்ன இது! சதா சர்வகாலமும் முக மலர்ச்சியுடனும், மனக்குதூகலத்துடனும் எம்மைக்கண்டு வினவும் தாங்கள் இன்று இவ்வளவு தூரம் மனமுடைந்து முகம் மாறு பட்டுத் துக்கத்திலாழ்ந்திருக்கக் காரணம் தெரியவில்லையே? நான் அறியக்கூடாதோ?

கலி:— அமைச்சரே! நீர் அறியாததும் உண்டோ! ஆயினும் என் துக்கத்தை ஆற்ற உம்மால் முடியாதென்றுதான் வருந்துகின்றேன். இருந்த போதிலும் சொல்லுகிறேன் கேளும்.

விருத்தம். தோடி.

மாடாடு கரிபரிகள் தேடியென்ன
மனையை மிக விஸ்தரித்து கட்டி யென்ன,

நாடாளும் மன்னவனுய்ப் பிறந்துமென்ன
நாற்றிசையும் புகழ்பெற்ருேங்க நடித்துமென்ன,
கோடான கோடி லக்ஷம் பவுன்களென்ன
குடங்குடமாய் பன்னீர் ஜவ்வாது மென்ன,
வாடாத முகம் படைத்த மனையாளென்ன
மக்கட் பேரில்லாதார்க் குவகையுண்டோ.

மந்:— தயாநிதி! அறிந்தேன், அறிந்தேன். தங்களுடைய மனக்கவலையானது மிகச்சிலாக்கியமும் சகஜமுமானதே 'யாழினிது, குழலினிது வென்பார் மக்கள் மழலைச் சொற்கேளா தார்'' என்றபடி மக்களின் மழலைச் சொற்களைக் கேளாதசெவியும் செவியல்ல. மக்களைப்பாராத கண்ணும் கண்ணல்ல. அதுவுமன்றி தாங்கள் இருந்து நடத்தும் ராஜரீகத்தைத் தங்களுக்குப்பின் யார்வசம் ஒப்புவிக்கின்றது. வாழையடி வாழையாய் வம்ச பரம்பரை பெருகிவிருத்தியானுலன்ருே நமது நாட்டுக்கும், ஜன சமூகத்துக்கும் பெருமையும், கீர்த்தியும் உண்டாகும். ஆனது பற்றி மகுடாதிபா! இவ்விஷயத்தில் எனக்கு ஒரு யோஜனை தோன்றுகிறது. உத்திரவானுல் சொல்லுகின்றேன்.

கலிங்:— பாட்டு

ராகம்: நாட்டை குருஞ்சி. தாளம்: ரூபகம்.

காலமதில் வழிதன்னை எடுத்துக்காட்டுவதே அழகு அமைச்சரே. (கா)
சீலமுடன் எனக்குற்ற குறைதன்னை
சித்தமுடனெழிப்பீர் ஞாயம் கொடுப்பீர் தேயம்அடுத்தீர் (கா)

துன்பம் வந்தகாலத்திலும் துயர்வந்துற்ற காலத்திலும் 'மந்திரிக் கழகு வரும்பொருளுரைத்தல்' என்றபடி முன்னறிந்து ஆலோசித்து ஈடேற மார்க்கம் கூறுவதுதானே அமைச்சர் கடமை. அப்படிக்கிருக்க என் மனக்குறையை அகற்ற மார்க்கம் சொல்லும் உமது மொழிக்கு யான்செவி கொடாதிருக்க

முடியுமோ. சீக்கிரமாகச் சொல்லும். அவ்விதமே செய்யத் தயாராயிருக்கிறேன்.

மந்:— மாட்சிமை தங்கிய அரசே, சித்தம்போல் என் கருத்தை வெளியிடுகின்றேன். தாங்களும் மகாராணியும் நமது நாட்டிலுள்ள சகலதேவதைகளையும வணங்கி அதிலும் நமது பரம்பரை தேவதைகளைத் தரிசித்து பூஜை முதலியன நடத்தினல் பாபவிமோசனமாகி மக்கட்பேருண்டாகுமென்று எண்ணுகிறேன். உத்திரவானல் அதற்காகவேண்டிய ஏற்பாடு களைச் செய்ய சித்தமாயிருக்கிறேன்.

கலி:— அமைச்சரே, அங்கனமே ஆகட்டும். நீர் அதற்காகவேண்டிய யாவும் சித்தப்படுத்திவையும் நானும் எனது பத்தினியும் நாளைக் காலை சூரிய உதயத்திற்கு முன்னமேயே புறப்படுகின்றோம். நான் திரும்பி வரும் வரையில் ராஜ்ய பாரத்தை செவ்வனே நடத்திவரயேற்பாடு செய்வீராக.

மந்:— அப்படியே ஆகட்டும்!

சீன் 3. ஓர் இடிந்த மண்டபம்.

உடுக்கடித்தல்—பேயாடுதல்—பூஜை முதலியன நடைபெருகின்றது. (கலிஸ்தோஸ் பிரபுவும் அவர் பத்தினியும் பிரவேசம், குறிகேட்டல், வணங்குதல் முதலியன.)

சீன் 4. அரண்மனை வைத்தியர். (தனிமொழி)

வை:— நான் இந்த கலிஸ்தோஸ் பிரபுவின் அரண்மனையில் அநேக வருஷங்களாக வைத்தியத் தொழில் செய்து கொண்டு

வந்தும் இதுநாள் பரியந்தம் என்னுடைய உண்மையான மதத்தையும், பெயரையும் வெளிப்படுத்தாது இருந்து வருகின்றேன். ஏனெனில் நான் கத்தோலிக்கு மதத்தைச் சேர்ந்தவன் என்று தெரிந்தால் உடனே துன்புறுத்த முயல்வார்கள். சில சமயம் மரணதண்டனையும் கிடைக்கும். அப்பேர்பட்ட இளகா ஹிருதயமுடைய கடினமனதோடு வன்னெஞ்சத்திலும் கன்னெஞ்சம் படைத்த கொடுங்கோன் அரசர்களாகிய மாக்ஸிமியன், தியோக்கிலேஷியன் என்ற இவ்விரு ராக்ஷஸ அரசர்களும், இந்த ரோமாபுரியைக் கிழக்கிலும் மேற்கிலுமாக இரண்டு திசைகளிலும் தங்களுடைய பெரும் புயற்காற்றுப் போன்ற ராஜகட்டளையை செலுத்தி கிறிஸ்துவக் குடும்பங்களை நாசமாக்கி அறவே ஒழிக்க முயல்கின்றார்கள். இந்த நிலையில் நான் கத்தோலிக்கு கிறிஸ்தவன் என்று வெளிக்குக் காட்டுவேனாகில் பின் என் கதி அதோகதி தான். ஆகையால் அந்தரங்கமாகவே என் வாழ் நாளைக்கழித்து வருகின்றேன். ஆனால் இந்த தேசத்தை அரசாண்டுவரும் கலிஸ்தோஸ் பிரபுவோ, அத்தகைய கொடூர அரசர்களுக்குக் கீழ்பட்ட சிற்றரசராயிருந்த போதிலும் தன் மட்டில் நல்லொழுக்கம் நன்னெறி, தயை, சாந்தம், பிறர் ஸ்னேகம் முதலிய குணங்கள் நிறைந்து சிறந்து விளங்குகின்றார். இவர் கடந்த பல மாதங்களாக மக்கள் பேரில்லாத சோகத்தால் எத்தனையோ தேவதைகளை வேண்டியும் பலன் கிடைக்காது வருந்துவதாகக் கேள்விப்பட்டேன். இந்த மகான் நம்முடைய சத்தியவேதத்தைத் தழுவுவதற்கான ஏற்பாட்டை செய்ய இது நல்ல சமயம் இப்பொழுதே சென்று சத்திய மார்க்கத்தின் மகிமையை எடுத்துச் சொல்லிப்பார்க்கின்றேன். (முழங்காலிலிருந்து) தேவ தாயே! அனாதைகளுக்கு அடைக்கலமே! நீர் இவ் விஷயத்தில் கருணைபுரிந்து அரசன் சத்தியமார்க்கத்தைத்

தழுவவும், அதன் பயனுய் அவர் கொண்டுள்ள அவா நீங்கிமக்கட் பேருண்டாகவும் தயை செய்தருளும் தாயே! இதோ இப் பொழுதே செல்கின்றேன்.

சீன் 5. கலிஸ்தோஸ் தனி அறை

கலி:— ஹே பரமதயாளு! இன்னும் உன் சித்தம் இரங்க வில்லையா! எவ்வளவோ முயன்றும், எவ்வளவோ உனனே தரிசித்தும் என்குறை தீரவழி தெரியாது தவிக்கின்றேனே.

சேவகன்:— மகராஜ்! நமது அரண்மனே வைத்தியர் தங்களேக்காண வந்திருக்கின்ருர்.

கலி:— நல்லது வரச்சொல்.

வைத்:— அரசே நமஸ்கரிக்கின்றேன்.

கலி:— சந்தோஷம் வைத்தியரே என்ன விசேஷம்?

வைத்:— பிரபோ, தாங்கள் மனேவியாதிப்பட்டு வருந்து வதாகக் கேள்விப்பட்டு தங்களேக் கண்டு போகலாமென்று வந்தேன்.

கலி:— வாஸ்தவமே உடல் நோய் அகற்றும் நீர் என் மனேவியாதியை அகற்ற மாட்டீரா?

பாட்டு.

ராகம்: தன்யாசி — தாளம்; ஆதி.

பல்லவி.

புத்திரப்பேரின்றி மெத்தவும் கலங்கினேன்
புண்ணியரே கேளும்.

அநுபல்லவி.

மூத்தியின் வழியென மூதறிஞர் சொற்படி
பத்தியமும் இருந்தும் பாதை வழிநடந்தும் (புத்)

வைத்:— பாட்டு. ஷ பல்லவி எடுப்பு
ராகம்: தன்யாசி தாளம்: ஆதி.

புத்திர சோகத்தால் மெத்தவும் கலங்கிய
பூபதியே கேளும் (புத்திர)

அநுபல்லவி.

சத்திய திருச்சபை உத்தம கிறிஸ்தவர்
தான் பணிந்துவரும் சர்வேஸ் வரனைவிடுத்து (புத்திர)

சரணம்

பாவ புண்ணிய மென்று பகுத்தறிவுக்கும் மதம்
பாதையைக் காட்டும் மதமே.
தேவ வரமளிக்கும் ஜீவரக்ஷண்ய மதம்
தீமையண்டாத மதமே.
சேவைதரும் அத்தேவ ரெக்ஷகனைப் பணிந்தால்
சித்த மீடேறுமிது சத்தியம் சத்தியம் அய்யே (புத்திர)

மன்னர் பிரானே! தாங்கள் மக்கள் பேரில்லாது மகத்தான சோக முற்றிருப்பதாக ஏற்கனவே கேள்விப்பட்டேன். தாங்கள் இதுகாலபரியந்தம் வணங்கிய தேவதைகளையும், அனுசரித்துவந்த மத அனுசாரங்களையும் விட்டு நான் அனுசரித்துவரும் சத்திய திருச்சபையில் ஈடுபட்டு சர்வேஸ்வரனுடைய ஞானதீக்ஷை பெற்றால் மக்கள் பாக்கியம் அடைவீர். இது சத்தியம். சக்தியற்ற தெய்வங்களையும் தகாத ஆராதனைகளையும், செய்து ஏராளமான பொருளை வீணிலே விரயம் செய்வதினால் பயனயாது? உண்டு செய்த தேவன் ஒரு பொருளிருக்க, கண்டதெல்லாம் தெய்வமென கைபெடுத்தால் பலன்

கிடைக்குமோ? கேவலம் மனுஷ்ய சரீர இச்சைக்குக் கட்டுப் பட்டு மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூவாசைகளையும் அறவொழிக்க ஆற்றலின்றி அதிலுழன்று நரஜென்மத்திலும் கேவலமாக வாணாளை வீணாக செலவழித்த பொய்யான தேவதைகளையும், மதக் கோட்பாடுகளையும் அனுசரித்து வணங்கி வந்தால் தெய்வச்சம்மதமும், அருளும் கிடைக்குமோ? எங்கும் வியாபகருமாய் ஏகப்பரம்பொருளாய் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராய், தாணுப், அனாதியாய், சரீரமில்லாதவருமாய், சர்வ வல்லமையும் நிறையப் பெற்றவரு மான ஏக சர்வேஸ்வரன் ஒருவரே நம்மை ஆண்டு காத்தளிக்கும் நாதன். பரலோக, பூலோக, பாதாளம் என்னப்பட்ட திரிலோக ங்களையும் உண்டுபண்ணி தன் சாயலாயான மனுஷ்ய ஸ்தூல சரீரத்தினுள் புகுந்த ஆத்மம் பரிசுத்தமடைந்து தன்னிரந்தர ராஜ்யமாகிய மோக்ஷ பேரின்ப பாக்கியத்தில் வந்தடைய அவலோடு காத்துக் கொண்டிருக்கிறார். அதை உணராது வீணிலே தாங்கள் குருட்டாட்டமான வழியில் தங்கள் புத்தியை செலவழித்து மெய்யான மார்க்கம் தெரியாது வருந்துகின்றீர் கள். ஆகையால் மாட்சிமை தங்கிய அரசே! என் மன்றாட்டு க்குத் தாங்கள் செவிசாய்த்து என் விண்ணப்பத்தின்படி செய்யு மாறு வேண்டிக்கொள்ளுகிறேன்.

கலி:— வைத்தியரே! இதுகாறுமில்லாது உம்முடைய அறிய வசனத்தால் என் ஹிருதயம் குளிர்ந்து கொஞ்சம் ஞான வெளிச்சமடைந்தது. இன்று முதல் நானும் என் பத்தினியும் நீர் சொல்லும் சத்தியமறையைப் பின்பற்றத் தயாராகக்காத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகளெல்லாம் நீரே செய்து முடியும். அந்த உண்மையான சர்வேஸ்வரன் எனக்கு மக்கட்பேருண்டாகும்படி செய்தால் அதுமுதல் நான் உண்மை கிறிஸ்தவனாக விளங்க காத்துக் கொண்டிருக்கிறேன். இன்றே நீர் சென்று சகலமும் திட்டம் செய்யும்.

வைத்:— பிரபோ! இப்பொழுதே செய்யலாம். குருவான வருக்கு சகலமும் தெரிவித்து தங்களுக்கும் மகாராணிக்கும் ஞான தீக்ஷை கொடுக்கும்படி செய்கின்றேன். என் பாக்கியமே பாக்கியம் வாருங்கள் போகலாம்.

(அரசர் ஞானஸ்நானம் பெற்றதைப்பற்றி அவரவருக்கு இஷ்டமான ஏதாவதொரு தமாஷான நடிப்பைஇங்கு வைத்துக்கொள்ளலாம்)

சீன் 6. கலிஸ்தோஸ் பிரபு சிம்மாசனத்தில் பிரதானிகள் சூழ அமர்ந்திருத்தல்.

கலி:— சபையோர்களே! கடந்த பல வருஷங்களாக புத்திர சந்தான மில்லாத குறைவினால் நான் அடைந்த மனக் கிலேசத்திற்கும், வியாகூலத்திற்கும் அளவே இல்லை, அதிலும் சில மாதங்களாக நானும் மகாராணியும் அனுபவித்த மனத்துயரம் சொல்லத்தரமன்று. இவ்வாறிருக்க கடைசியாய் மந்திரியாரின் வேண்டுகோளுக்கிணங்கி எத்தனையோ இடங் களுக்குச் சென்று, தேவதைகளை தரிசித்து மக்கட்பேர் உண் டாக பிரார்த்தித்தும், அனைத்தும் பாழாயின. முடிவில் நமது அரண்மனை வைத்தியர் வந்து என்னை வேண்டிக் கொண்டபடி நான் கத்தோலிக்கர்கள் அனுசரித்துவரும் சத்தியமார்க்கத்தில் பிரவேசித்து ஞான தீக்ஷை பெற்று "அந்த ஒரே சர்வேஸ்வரனை என் உள்ளத்தில் தியானித்து வணங்கினேன். அதன் பயனாய் அந்த உன்னத பரமநாதன் என் குறையை அகற்ற அருள் புரிந் தார். அந்த நித்திய கருணாநிதியின் ஆசீர்வாதத்தால் என் பத்தினி கர்ப்பினியாகி அவள் உதரத்திலுள்ள சிசுவும் வளர் பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வருகின்றது. இத்தகைய மகிமைப் பிரதாபம் நிறைந்த சத்திய மறையை இதுகாறும் தெரிந்து

கொள்ளாது மூடர்களாயும், குருடர்களாயும் காலம் கழித்து வந்தோமல்லவா! மெய்ப்பொருளான ஆதி காரண கர்த்தனைப் போற்றாது, பித்தரைப் போல் பேய் பிசாசுகளுக்கும், காட்டேறி தேவதைகளுக்கும், நமது சரீத்ரதை தத்தம்செய்து, தனத்தையும் விரயமாக்கி வீணுக்குழைக்கும் வேஷதாரிகளை நம்பி, மோசம் போனோமல்லவா! நித்திய சாஸ்வதசொரூபியாகிய சத்தியநாதனு டைய உத்தம மார்க்கத்தையடைய சகலரும் புறப்படுங்கள். நமது நகர முழுவதும் பிரசித்தம் செய்ய ஏற்பாடு செய்யுங்கள்.

சேவகன்:— மகராஜ்! அந்தப்புரத்திலிருந்து லிகிதம் வந்திருக்கிறது. (கடிதம் கொடுத்தல்)

கலிஸ்:— (கடிதத்தை வாசித்து எழுந்து நின்று கைகூப்பி)

விருத்தம் அடாணா.

சத்தியம் தழைத்து ஓங்க ஜகதலம் நிறைந்த பாவ
பித்தரை அணைத்துக் காக்கப் பிறந்த என்தேவ தேவா
இத்தரை தனிலே எந்தன் இடர்குறைதனையே நீக்கி
புத்திரி பாக்ய மீய்ந்த புண்ணியா சரணம்பணிந்தேன்.

மந்திரியாரே! அந்தப்புரத்தில் மகாராணிக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கின்றதாம். ஆகையால்,

பாட்டு.

ராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

சேதிசொல்ல எங்கும் பறை விடுப்பீர் — நாலு
திக்கும் அஞ்சல் விட்டு
வீதிதனில் வாழை கமுகிட்டு
விந்தை விந்தையாகப் பந்தலிடச் செய்து (சேதி)

கந்த பரிமளவாசனையும் கொள்ளக்
காவலரை விடுப்பீர் நல்ல
சந்தனங் குங்குமம் ஜவ்வாதுகள் முற்றும்
ஜாடாகவே நிறப்பி
பந்தி பந்தியாக வந்தவர்க்கு சொர்ணப்
பட்டாடை தாம்பூலம் மட்டில்லாது தர்மம்
பண்ணுவீர் நீரே பண்ணுவீர் எந்தப்
பாவலர் கேவல பாமரராயினும்
பார்த்து முற்றும் முடிப்பீர். (சேதி)

அமைச்சரே! இந்த சுபசேதியை நமது நாடெங்கும் பிரசித்தம் செய்து, வீதிதோரும் பந்தல் தோரணங்களால் அலங்கரித்து, ஏழைகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் அன்னதானம் முதலிய சிற்றுண்டிகளும் வழங்க ஏற்பாடுகள் செய்யும். அதுவுமன்றி நமது அரண்மனைக்கு விருந்தினராக வரக்கூடிய அரசர்களுக்கும், பிரபுக்களுக்கும் அவரவருக்குத் தகுந்த மறியாதை செய்யத்தக்க யாவும் சித்தப்படுத்தும். நான் சென்று என் அறிய குழந்தையைப் பார்த்து வருகின்றேன்.

சீன் 7.

(அந்தப்புரம். குழந்தையை தொட்டிலிட்டு சேடிகள் தாலாட்டுதல். கலிஸ்தோஸ் பிரபுவும், பத்மினியுமாக சேர்ந்து கைகூப்பி.)

பாட்டு.

ராகம்: நீலாம்புரி தாளம்: ஆதி

1. சத்ய மறைதேவன் தந்த சம்மனசாகப் பிறந்த
 பித்த ரெங்கள் பேரானந்த பேளையமே கண்வளராய்.
2. காலயரதேகம் சோர காத வழிதானடந்து
 ஆலயமாய் உன்னைக்கண்டோம் அஞ்சுகமே கண்வளராய்.
3. சேசுமரி அருளால் வந்த சிற்பரூபமாய்ப் பிறந்த
 மாசில்லாத பவளமுத்தே மாமணியே கண்வளராய்.

சீன் 8. கோவில் சீன். ஞானஸ்நானம்.

சீன் 9.

அரண்மனை உக்ரான மண்டபம்—ஞானஸ்நானக்குதூகலம், விருந்தினரை உபசரித்தல், பந்திபராமருதல், அன்னதானம், தமாஷ்பேச்சு முதலியன.

சீன் 10.

அரண்மனை அந்தப்புரம். (பாடுபட்ட சொரூபம் அல்லது படத்தின் முன் முழங்காலிட்டு)

பிலோ:—பாவிகள் மனந்திரும்ப மனுஷ்யவதார மெடுத்துப் பிறந்து திருச்சிலுவையில் அறையுண்டு, உயிரைத் தியாகம் செய்த பூலோக ரக்ஷகரே! என் தூய கற்பை உமக்கு ஒப்புக் கொடுக்கிறேன்.

(பின்பு தேவமாதாசொரூபம் அல்லது படத்தின் முன் முழங்காலிட்டு)

பாட்டு.

கிளிக்கண்ணி மெட்டு.

1. ஜென்மவினையணுகா செல்வியே ராக்கினியே
கன்ம வினையணுகா தாயே
காணிலென்னைக் காத்தருள்வாய் (ஜென்ம)

2. சின்னஞ்சிறுவயதில் சேவடியை அடைந்தேன்
கன்னிமை காத்தவளே தாயே
கற்பினைக் காத்தருள்வாய் (ஜென்ம)

3. துஷ்டாஞ்ஞானிகளால் சூழ்ந்த என் தேசமிது
கஷ்டம் வராதுஎந்தன் தாயே
கற்பினைக் காத்தருள்வாய். (ஜென்ம)

(சிறிதுநேரம் கைகூப்பி, கண்மூடி மௌனமாயிருத்தல்)

சேவ:— அம்மணி! மஹாராஜா தங்களைக்காண வெகு ஆவலாக காத்துக் கொண்டிருக்கிறார். தங்களை அழைத்து வரச்சொன்னார்.

பிலோ:— யார்! அப்பா என்னை அழைத்தார்களா? எங்கு இருக்கின்றார்கள்? இதோ வருகின்றேன். எங்கே இருக்கின்றார்கள்? (என்று சொல்லிக்கொண்டே செல்லுதல்)

சீன். 11.

(சபாமண்டபம் கலிஸ்தோஸ் ஸோபாவில் வீற்றிருத்தல்)

கலி:— என்னரும் செல்வமாகிய பிலோமினாளை அழைத்து வரும்படி காவலனை அனுப்பினேன். இன்னும் வரவில்லையே! என் கண்மணி பள்ளிக்கூடம் சென்றிருக்குமோ! அல்லவே! பள்ளிக்கூடம் முடிந்து போஜன வேளையல்லவோ இது! ஓஹோ! அதோ வருகின்றாள் என் அருந்தவப் புதல்வி!

பிலோ:— அப்பா! அழைத்தீர்களாமே என்ன விசேஷம்?

கலி.—(மகளை அணைத்து முத்தமிட்டு)

மார்கழி மாதம் எ. வ. மெட்டு.

கலி:— தேன் பொழி மழலை வாய் மொழி பகரும்
ஜெகதல சௌந்தரியே
மீன் முடி புனைந்த நாயகி தந்த
விமலியே திருமணியே

பிலோ:— ஈயெறும்பணுகா ஈன்றென்னை வளர்த்தீர்
எண்ணருந் தவம் புரிந்தீர்
சேயென்னை அழைத்தீர் எதென உரைப்பீர்
சேவகன் தனைவிடுத்தீர்

கலி:— என்னென்ன பாடம் இதுவரை பயின்றாய்
எங்கெங்கு சென்றிருந்தாய்
அன்னம் போல் பிறந்த அறிவுள்ள குழந்தாய்
அனைத்தையும் எடுத்துரைப்பாய்

பிலோ:— காலையிலெழுந்து கடவுளைப் பணிந்தேன்
கருத்துடன் கோவில் சென்றேன்
வேளையில் குறித்த விதிமுறைப்படியே
விதவிதக் கல்வி பயின்றேன்
சிற்றுண்டியுடனே சிறந்த பக்ஷணமும்
சீருள்ள பால்பழமும்
பற்றுடன் அருந்தி பந்தடித்தாடி
பலவித மாயிருந்தேன்.

கலி:— என்னரும் செல்வமே! சிறு பிராயத்திலேயே உனக்கு இவ்வளவு ஞானமும், புத்தி தீக்ஷிண்யமும் உண்டானதைப் பற்றி என் அகம் பூரிக்கின்றது. உன்னுடைய வதனப் பிரகாசத்தைக்கண்டு என் மனம் குதூகலிக்கின்றது. உன்னுடைய மழலை மொழியால் என் செவிகள் இன்புறுகின்றது. என் கண்ணே!

(தாயார் வந்து மகளை முத்த மிட்டு) கண்ணே பிலோமினு! நாழியாகின்றது. போஜன மருந்தி பள்ளிக்கூடம் செல்ல வேண்டாமா? பிராணபதி! போஜனம் தயாராயிருக்கிறது. வாருங்கள்.

கலி:— இதோ வருகிறேன் நீங்கள் செல்லுங்கள்.

காவ:— பிரபோ! கலேரியஸ் மன்னரிடமிருந்து நிருபம் வந்திருக்கிறது.

கலி:— யார்? கலேரியஸ் மன்னரிடமிருந்தா? ரோமையிலிருந்தா? கொண்டுவா?

(கடிதத்தைப் படித்தல்)

(நிருபம்)

கிரீஸ் தேசத்து மன்னரான கலிஸ்தோஸ் பிரபுவுக்கு ரோமைச் சக்கரவர்த்தியின் மருமகனுன கலேரியஸ் வரைந்துள்ள நிருபம்.

நாளைகாலே சூரிய உதயத்திற்கு முன் நானும் என் படை வீரர்களும் உமது கிரீஸ் பட்டணத்தின் கோட்டை வாயிலில் யுத்தத்திற்குத் தயாராக காத்துக் கொண்டிருப்போம். நீயும் ஓர் வீரனென்று கருது வாயாகில் உடனே என்னுடன் போர் தொடுக்கத் தயாராயிரு? தாமதிப்பாயாகில் கோட்டை வாயிலைக் கடந்து உள்ளே பிரவேசித்து விடுவோம்.

இப்படிக்கு

கலேரியஸ்.

கலி:— ஹே! கருணநிதி! வெண்ணே திரளும்போது தாளி உடைந்த கதை போலாயிற்றே! எவ்வளவோ காலமாக மனக் கவலையால் பீடிக்கப்பட்டிருந்த நான் உன்னுடைய விசேஷ அருளினல் என்னரும் தவச் செல்வியைப் பெற்று குதூகலித்திருக்கும் இந்த நாளில் "யுத்தத்திற்கு புறப்படு" என்பதாக நிருபம் அனுப்பி யிருக்கின்றனே! கொடிய கல்நெஞ்சம் படைத்த கலேரியஸ் அக்கிரமமாய் என்னுடன் போருக்கு வருகின்றனே! இந்த யுத்தத்தில் நான் எதிர்த்து போராடுவேனகில் என் ராஜ்யத்திலுள்ள பிரஜைகள் யாவரும் உயிரிழக்கவேண்டிவருமே! அல்லது சும்மாயிருப்பேனகில் என் விரோதிகள் உள்ளே பிரவேசித்து ராஜ்ய முழுவதும் பாழாக்கிவிடுவார்களே! இந்த சங்கடத்திற்கு நான் என்ன செய்வேன்! ஜீவகாருண்யம், தயை, சாந்தம் முதலிய நற்குணங்களுடனே என் பிரஜைகளே நான் கண்காணித்து வரும் நாளில் இக்கொடிய யுத்தப் புணர்ச்சியால் என் ஏழைமக்களிடம் நான் வசூலிக்கும் கிஸ்துப் பணங்களேயும்

விரயம் செய்து என் ராஜ்யத்திலுள்ள புராதனக்கட்டிடங்களை யும் நாசமாக்கிபுத்திரரை இழந்து தாய்மார் தவிக்கவும், புருஷர்களை இழந்து பெண்மக்கள் தத்தளிக்கவும், தந்தையை இழந்துபெற்ற பிள்ளைகள் பரிதவிக்கவும் விட்டு சகல பாலிய புருஷர்களையும் பலிகொடுத்து ரத்தவெள்ளமாய் என் தேசம் சீர்கெட நான் சம்மதிப்பேனே! கிருபாசமுத்திரமாகிய ஏகசர்வேஸ்வரா! இதுவும் உன் சித்தமோ! (மௌனமாய் இருத்தல்)

பத்மினி:— பிராணபதி! போஜனமருந்தவராது ஏன் தாமதிக்கின்றீர்கள்!—என்ன! முகம் மாறுபட்டிருக்கின்றதே!

பாட்டு.

ராகம்: கமாஸ். பல்லவி தாளம்: ரூபகம்.

மாக்ஷிமை நிறை ப்ராணபூபதி
மனதில் கோபமோ தாபமோ (மாக்ஷி)

அனுபல்லவி

ஆக்ஷிசெய்திடும் ராஜரீகத்தில்
யாதோ — வாதோ — தீதோ —ஓதுவீர். (மாக்ஷி)

சரணம்.

ஆசைக் காதலி நேசமாய் வந்தேன்
அறியச் சொல்லொண்ணாத யோஜனை
மாசில்லாத சோமவதன
மகிபா — அதிபா — துணைவா —மொழிவீர் (மாக்ஷி)

நாதா! செந்தாமரை மலர்போன்ற தங்கள் முகம் இவ்வளவு வாடியிருக்க காரணமென்ன? தர்பார் மண்டபத்தில் ஏதாகிலும் விசேஷமுண்டா? அல்லது பிரஜைகளிடத்தில் துவேஷமா? நமக்குள்ள குறைகள் நீங்கி நாம் சந்தோஷமாய் இருக்கும் நாளில் தாங்கள் இவ்வாறு மௌனித்திருக்க காரணம் தெரியவில்லையே! என்னிடம் சொல்லலாகாதா?

கவி;— பாட்டு.

ராகம்: பிலகரி. தாளம்: மிஸ்ரஜாதி சாப்பு.

1. அன்னமே துன்ப காலம்
அடுத்து வந்ததென் செய்வேன் பெண்ணே
இன்னல் விளைவதாலே
என்ன விதமாகுமோ பெண்ணே

பத்மினி 2. ஒன்றுமறிகிலேனே
உற்றதும் தெரியேனே நாதா
மன்றுள்ளமர்ந்து நோக்கும்
மாதாவின் அடைக்கலம் நாதா

கவி 3. ரோமைச் சக்ரவர்த்தி ம
ருகன் விடுத்தானேலே பெண்ணே
தீமை விளையப்போரைத்
திரட்டித்தொடுப் பேனென்று பெண்ணே

பத்மினி 4. ஐயோ நானென்ன செய்வேன்
அருமை பிலோமினாளே கண்ணே
செய்யாத் தவமிருந்து
சேயுன்னையே வளர்த்தேன் கண்ணே

ஹா! பரமராக்கினி! இதுவோ நீர் எங்களுக்கு அனுப்பும் சோதனை! "பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பது போல் கவலை நீங்கிற்றென்று இருந்த எமக்கு, மறுபடியும் பெரும் சஞ்சலத்தைத் கொடுக்க வேண்டுமா? நாங்களும் எங்கள் அருந்தவப் புதல்வியும் எங்கு சென்று தப்புவது? போருக்கு வரும் அரசனோ கொடிய மூர்க்கனாயிற்றே! நீதிமுறையில்லாமல் அக்கிரமமாய் போர் புரிபவனாயிற்றே!

கவி:— பிரியநாயகி! கவலைப்படாதே. என்ன செய்யலாம் தேவ சித்தத்தை தடுக்க வல்லார் யார்? நாம் இவ்வாறு

வீணில் வருந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. மேல் நடக்க வேண்டியவற்றை கவனிக்க வேண்டும். அந்தக் கொடிய கலேரியஸ் என்பவன் யாருக்கும் அடங்காதவன். அவன் மாமா வாகிய ரோமைச் சக்கரவர்த்திக்கு மாத்திரம் கட்டுப்பட்டவன். ஆகையால் நாம் அந்த ரோமைச் சக்கரவர்த்தியின் அரண்மனைக்கு விருந்தினராகச் சென்று நமக்கேற்பட்டுள்ள சங்கடத்தைத் தெரியப்படுத்தி, அந்த கலேரியஸ் நம்மீது படையெடுத்து வராத படி தடுத்துக் கொள்வோம். ஆகையால் நாளை காலை சூரிய உதயத்திற்குமுன் நாம் புறப்பட வேண்டியிருக்கிறது. கண்மணி பிலோமினாளை அழைத்துக்கொண்டு பிரயாணத்திற்கு தயராயிரு.

பத்மி:— நாதா! அப்படியே ஆகட்டும். தங்கள் சித்தமே என் பாக்யம்.

சீன் 12.

(தியோக்லேஷியன் மாளிகை — மதுபானமருந்தி சோபாவில் சாய்ந்திருத்தல்.)

சே:— மகராஜ்! கலிஸ்தோஸ் பிரபு வந்திருக்கின்றார். (மறுபடியும் சொல்லுகின்றான்.)

தியோ:— (சற்று மயக்கம் தெளிந்து) உம்! கலிஸ்தோஸ் பிரபுவா?—யாது காரணம் பற்றி.—நல்லது வரச்சொல்.

(கலிஸ்தோஸ் பத்மினி, பிலோமினாள் மூவரும்வருகிறார்கள்)

கலி:— பிரபு நமஸ்கரிக்கின்றேன்.

தியோ:— வாரும் கலிஸ்தோஸ் பிரபு! எல்லோரும் அமருங்கள். எதுஒரு நாளும் இல்லாத விதமாய் இன்று என் அரண்மனைக்கு தாங்கள் குடும்பசகிதமாய் எழுந்தருளியது?

கவி:— பாட்டு.

புவிமீதென்ன எ. வ. மெட்டு.

பல்லவி.

சுகபூபதி கண்டேன் கொண்டேன்
துயரென்னுள்ளம் — சுகமனோகரா (சுக)

அநுபல்லவி.

அகமேவிய சஞ்சலத்தாலே
அண்டினேனிக்காலே விண்டிடவும் நாளே (சுக)

சரணம்

தென்திசை கொண்டாளும் சிற்றரசக் கோமான்
சிந்தைநோக நாடிச் செய்யும் போரதை,
மந்தகாசமாய் மனங்கொள்ளுவீர்
மாதவா நிறுத்த —சாதகப்படுத்த. (சுக)

பிரபோ! தங்கள் மருமகனாகிய கலேரியஸ் என்பவர் திடீரென்று என்மீது படையெடுத்து வருகின்றார். தற்சமயம் அதற்கு யாதொரு பிரயத்தனமும் எடுத்துக்கொள்ள முடியாமல் நிராயுதபாணியா யிருக்கிறேன். ஆகையால் அதற்காகத் தங்கள் உதவியை நாடிவந்தேன்.

தியோ:—(அழகே உருவாய் தன்முன் தோன்றிய பிலோமினாளைக் கண்டு திகைத்து மகிழ்ந்து)

பாட்டு.

நிஜமர்மமுலனு —எ. வ. மெட்டு.

இது ஒரு மலையா கவலையும் பெரிதா
ஏதும் பேதமில்லை எனை யணுகியதால்
பொது நிலைவகியாப் புனைந்தவ னெதிர்த்தான்
போரதா லுண்டாகு மனைத்தையும்
சீரதாகவே முடித்திட (இது)

ஆஹா! இதுதானு ஒரு பிரமாதமானகாரியம். இந்தக்ஷணமே என் தளகர்த்தனை அனுப்பி அவனுடைய போரை நிறுத்தி விடுகின்றேன்.—யார் அங்கேகாவலன்? (லிகிதம் வரைந்து) நீ உடனே சென்று இதைபிரதான மந்திரியிடம் கொடு கலிஸ்தோஸ் பிரபு! இனி நீர் கவலையுற வேண்டாம் குடும்ப சகிதமாய் தாங்கள் என் அரண்மனைக்கு எழுந்தருளிபதினுல் சிலகாலம் விருந்தினராகத் தங்கியிருந்து பிறகு செல்லலாம். வாருங்கள் போகலாம்.

சீன் 13. அரண்மனை மண்டபம்

ஆஹா! நேற்றுகாலை நிகழ்ந்தனவெல்லாம் கனவோ அல்லது நினைவோ! நான் பெற்ற பாக்கியமே பாக்கியம். என்! கண்கள் குளிரும்படியாக ஒரு தோற்றத்தைக் கண்டேனல்லவா? மதியையும் இழக்கும்படியான இப்பேர்ப்பட்ட உருவமும் உலகிலிருக்கின்றதா? என்ன அழகு! என்ன மதிவதனம்! சுவர்ண பிம்பம் போன்ற மேனியும், பொன்மலரை யொத்த முகமும், பவளம் பழித்த இதழும், கருவண்டினை யொத்த கூந்தலும் ஒருங்கே அமையப் பெற்ற இம் மான் விழியாள், இளங்கன்றுபோல் என் பார்வையில் பட்ட க்ஷணத்திலிருந்து என் மனம நிம்மதியடையாது தவிக்கின்றேனே. ஹா! என் கட்டிக் கரும்பே! கனி ரசமே! உன் உருவத்தையும் மறந்து இருக்க முடியுமோ! அல்லது மறந்தாலும் என் உயிர் தரிக்குமோ! கோவைப்பழத்தை யொத்த உன் வாய்மொழியைக் கேட்டு ஆனந்திக்கும் பாக்யம் என்று கிடைக்குமோ! இனியும் உன்னை யான் என் அரண்மனையை விட்டுப்போக விடுவேனோ? விடேன்! விடேன்! தானுகவந்து என் கரத்திலகப்பட்ட கிளியைக் கொஞ்சாது விடுவேனோ! இந்த ரோமாபுரிக்கு அதி

பதியாக ஏகசக்ராதிபத்யம் செலுத்தும் நான்! நினைத்த காரி யத்தை முடிக்காது போவேனாகில் அது என் குலத்துக்கும், பரம்பரை வம்சத்திற்கும் இழிவல்லவா? அந்த இளங்கொடியை நான் அடையாவிட்டால் இந்த ராஜபதவி எதற்கு? இத்தனை செல்வ சுகங்கள் எதற்கு? இவ்வளவு அதிகாரப் பட்டம் எதற்கு? ஒன்றும் வேண்டியதில்லையே! அழகு சௌந்தரியம் நிறைந்த ஒரு யுவதியை என் போன்ற ராஜகுல திலகன் மணந்தாலன்றோ கண்ணியமாயிருக்கும்!

கலிஸ்தோஸ் பிரபுவுக்கு நான் செய்த உபகாரம் மிகவும் பெரிதல்லவா! அந்த உபகாரத்தை நான், இந்த சௌந்தரியம் நிறைந்த பெண்மணியை உத்தேசித்தல்லவா செய்தேன்! இல்லா விட்டால் அந்தப்போரை நிறுத்தும் படிக்கான உதவியை அவரு க்கு செய்ய எனக்கென்ன கடமை? ஆகையால் அவர் எனக்கு பிரதி உபகாரம் செய்ய கடமைப் பட்டவர் அன்றோ? —ஆமாம் வாஸ்தவமே— யார் அங்கே?

சேவ:— மகராஜ்! காத்துக் கொண்டிருக்கிறேன்.

தியோ:— நீ உடனே சென்று கிரீஸ் தேசத்து அரசராகிய கலிஸ்தோஸ் பிரபு இறங்கியிருக்கும் மாளிகைக்குச் சென்று அவரை அதிசீக்கிரமே அழைத்துவா.

சேவ.— உத்திரவு மகராஜ்.

தியோ:— கலிஸ்தோஸ் பிரபு என் வார்த்தைக்கு கட்டுப்படு வாரென்றே நினைக்கிறேன். இதுவரையில் நான் காதலித்த பெண் கள் ஒருவரும் என்னைவிட்டுத் தப்பினவர்களில்லை. மேலும் இந்தப் பிரபுவோ, எனக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசானதினாலே அவர் எப்படியும் என் வேண்டுகோளுக்கிணங்கி என் விருப்பத்தை பூர்த்தி செய்வாரென்றே நினைக்கிறேன்.

கலி:— வேந்தே! வந்தனம். தாங்கள் என்னை அழைத்த தூக காவலன் தெரிவித்தான்.

தியோ:— ஆம். வாரும்? இந்த ஆசனத்திலமரும். நண்பரே! உம்மை நான் இங்குவரவழைத்தது ஓர் முக்கியமான விஷயத்தினிமித்தமே ஆயினும் அதிருக்கட்டும். நண்பரே! தாங்கள் யுத்தபேரிகை முழக்கத்தையும் போர்க்கடிதத்தையும் கண்டு உடனே என்னை நாடிப்புறப்பட்டு வந்ததின்காரணம் என்னுடைய உதவியை நாடித்தானே?

கலி:— ராஜ மகிபா! அதற்கென்ன சந்தேகம். யுத்தம் ஆரம்பித்து விட்டால், அதனால் என் அன்புள்ள பிரஜைகளில் சிலர் உயிர் துறக்கவேண்டி வருமே என்று மனம் தத்தளித்து அதி சிக்கிரமே நான் புறப்பட்டு என் குடும்ப சகிதமாய் தங்களை நாடி வந்ததின் பயனைப் மறக்க முடியாத தங்களுடைய பேருதவியையும் பெற்றேன். அதில் என்ன சந்தேகம்! இதுவிஷயத்தில் தாங்கள் எனக்கு ஓர் உபகாரி போலிருந்து உதவி புரிந்ததற்கு நான் என்ன கைம்மாறுசெய்யப் போகின்றேன்.

தியோ:— பாட்டு.

ஜெகத்குருபர ஷண்முகா எ வ மெட்டு.

எனக்கோ ருபகாரம் செய்வீர் -- ராஜதோழரே
மனக்கவலையதனால் வாடி உள்ளம் நோகுது
வணக்கம் எனக்கு செய்து வந்தும் பயனில்லை நீர் (என)
இந்தகவலையாலே என்னங்கமும் வாடுதே
எந்த விதத்திலேனும் இல்லையென்று சொல்லாமல் (என)

நண்பரே! ஓர் காரணத்தின் நிமித்தம் என் உள்ளம் உடைந்து மனம் சமாதானமின்றி தவிக்கின்றேன். அந்தக்காரியம் கைகூடுவதற்கு தங்களுடைய ஒத்தாசையே வேண்டியது. நீர்

எனக்கு செய்துவரும் வணக்கமும் மரியாதையும் பெரிதல்ல நான் உமக்கு செய்த உதவியும் பெரிதல்ல. நீர் எனக்கு இனிசெய்யப் போகும் உதவியே பேருதவியாகும். ஆகையால் என்ன சொல்லுகிறீர்?

கலி:— ராஜேந்திரா! வணங்காமுடியும், வலிமையும் பெற்று ராஜரீகம் செலுத்தும் தங்களுக்கு என் போன்ற சிற்றர சன் செய்யக்கூடியது தான் என்ன? தாங்கள் என்னை ஒரு பொருட்டாக மதித்து கேட்கும்போது நான் என்ன சொல்லக் கூடும்? என் உடல் முழுவதுமே தங்களுக்கு சேவை செய்யக் கடமை பட்டதன்றோ?

தியோ:— அப்படியல்ல. நீர் பொதுவாகப் பேசுகின்றீர். அப்படிப் பேசலாகாது குறிப்பிட்டுச் சொல்லுகின்றேன். நான் கேட்கும் விஷயத்தை தாங்கள் மறுக்கக்கூடாது. என்ன சொல்லுகின்றீர்?

கலி:— பிரபோ! என் மீது தங்களுக்கேன் இவ்வளவு சந்தேகம்? நான் சொன்ன சொல் தவரமாட்டேன். ஆகையால் தாங்கள் என்னிடம் கேட்பதற்கு முறண்பட மொழிவேனென்று எண்ண வேண்டாம். அரசவள்ளலே! தாங்கள் எனக்கு செய்த பேருதவிக்கு பிரதி உபகாரமும் என்னால் செய்யமுடியுமோ? எதுவேண்டுமானாலும் சரி. தங்கள் சித்தம் போல் நடக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தியோ:— தோழரே! தாங்கள் சொன்னவை யாவும் சரியே. ஆயினும் என் மனம் ஸ்திரப்படவேண்டும். சிலவேளை தாங்கள் பேச்சினின்றும் மாறினும் மாறலாம். உம் மட்டில் எனக்கு நம்பிக்கை உண்டாகவேண்டும். ஆகையால் தாங்கள் தயவுசெய்து தங்கள் புதல்வியின் மேல் ஆணையிட்டு என் சித்தப் படியே என் வார்த்தைக்கு இணங்குவதாக வாக்களியும்.

கலி:— விருத்தம் அடாணு.

இத்தனை விதமாயென்னை இறந்து கெஞ்சிடவும் போமோ
சித்திரக்கொலுவை யாளும் சிறந்த என்ராஜரீகா
புத்திரி பிலோமினுணை புகழ்பெற ஈவேன் ஈவேன்
சத்தியம் தவறமாட்டேன் தடையின்றி பெற்றுக்கொள்வீர்,

ராஜப்பிரபு! என்னருந்தவப் புதல்வி பிலோமினுளின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். தங்கள் வார்த்தையை தட்ட மாட்டேன். இனியும் சந்தேகமா?

தியோ:— பாட்டு.

நானே னேவினேன் எ. வ. மெட்டு.

பல்லவி.

ஆசையாகினேன் பிலோமினுள் மேல் (ஆசை)

அனுபல்லவி.

பாசம் பெருகுதப் பாவை யிளங்கொடி
நேசந்தனில் மன நீடும்படி (ஆசை)

சரணம்.

அன்பரே சிறக்க அனுமதி தருவீர்
ஆவல் மெத்த செல்வியை மணக்க— கொண்டேன்— வே
றதிகம் ஒன்றும் வேண்டிலேன் (ஆசை)

நண்பரே! உமது சுந்திரப்புதல்வி பிலோமினுளை எனக்கு மணமுடித்து வைக்கவேண்டும்? இதுதான் நீர் எனக்கு செய்ய வேண்டிய பிரதி உபகாரம். ஆணையிட்டுக் கூறியிருக்கின்றீர் ஞாபகமிருக்கட்டும்? இதற்கு நன்கொடையாக உமக்கு நான் ஒன்று செய்கின்றேன். அதாவது இனி நீர் எனக்கு சேரவேண்டிய பகுதிப்பணத்தை செலுத்த வேண்டியதில்லை. —என்ன மௌன மாயிருக்கின்றீர்?

கலி:— (கொஞ்சநேரம் ஸ்தம்பித்திருந்து விட்டு) பிரபு! அப்படியே ஆகட்டும். ஆயினும் நான் சென்று என் புதல்வியின் விருப்பத்தைக் கேட்டு வருகின்றேன். உத்திரவு கொடுங்கள் (வணங்கி விட்டு செல்கிருர்.)

கலி:— பாட்டு.

மனுஜசரீர எ. வ. மெட்டு.

நரகமீடேற்றிய நாயகனே
நாயகனே நாயகனே (நரக)
தாயகமதில் வந்த தூய விநோதா
தாரணிதனிலுறை பூரண நாதா
சரணம் சரணம் தருணம் கண் பாரும்
நாதா நீதா வேத பொற்பாதா (நரக)

சீன் 14.

(மாளிகை மண்டபம் — கலிஸ்தோஸ் பிரபு ஓர் ஆசனத்தில் அமர்ந்து மௌனமாயிருந்து பின்)

கலி:- ஆஹா! என் ஜென்மமும் ஒரு ஜென்மமா? ஹே! சர்வேஸ்வரா! ஏனே என்னை இப்பாழும் உலகில் மனுஷனய் படைத்தீர்! துன்பத்தின் மேல் துன்பமும், சஞ்சலத்தின் மேல் சஞ்சலமுமாக என்னை வாட்டுகின்றதே! பரஞ்சோதி! குழந்தையில்லாமல் நான் பட்ட கஷ்டம் பெரிது! பிறகு யுத்த நிருபம் கண்டு நான் பட்ட கஷ்டம் அதினினும் பெரிது! இப்பொழுது நேர்ந்திருக்கும் சம்பவமோ இவைகளை எல்லாம் பார்க்கக் கொடியதாய் இருக்கின்றதே! என் கலி தீர ஒரு குழந்தையைக் கொடுத்து, அதற்கு இவ்விதமான கஷ்டத்தைக் கொடுக்க வேண்டுமோ! பரமதயாளா! உம்முடைய சித்தம் தான் எவ்வாறுளதோ! அந்த சக்ரவர்த்தி

என்னை இனிமேல் சும்மா விடமாட்டானே! என் குழந்தையை அபகரிக்காது போகமாட்டானே! என் பசுங்கிளியைக் கேட்பானென்று நான் கிஞ்சித்தும் எண்ணவில்லையே! கபடமாய் அவன் கேட்டதற்கு முன் பின் யோஜியாமல் என் அருந்தவச் செல்வியின்மீது ஆணையிட்டு வாக்குத்தத்தம் செய்து விட்டு வேறு வழி தெரியாது தவிக்கின்றேனே! தந்திரமாய் என்னை மோசம் செய்து விட்டானே! அஞ்ஞான இருள் அடர்ந்த அவனுடைய கடின ஹிருதயம் இனிமேலும் இளகுமோ! அல்லது அவனுடைய எண்ணத்தை மாற்ற எவருலும் தான் முடியுமோ! வலியச்சென்று சிக்கிக்கொண்டு என்னைப்போல் பரிதவிக்கும் நிற்பாக்கியனும் உலகிலுண்டோ! தாயே! மோக்ஷப்பிரதாபியாகிய ராக்கினியே! உன் திருமகனைப் பரிகொடுத்து அன்று நீ பரிதவித்தது போல் என் குழந்தையையும் நான் பரிகொடுத்து பரிதவிக்கவைத்தாயோ! உன்னுடைய சோம பாதத்தை சிரமேற்கொண்ட எனக்கும் இவ்வித கஷ்டத்தைக் கொடுக்கலாமோ! பரமராக்கினியே! பாவிகளின் தஞ்சமே!

(அரசன் சோர்ந்து சாய்ந்து கிடப்பதைக் கண்டு அருகில் வந்து பத்மினி உபசரித்தல்)

பத்மி:- பாட்டு.

இராகம். காம்போதி. தாளம். மிஸ்ரஜாதிசாப்பு.

(1) என்ன வகையாலே நீர் இவ்விதம் சோகமாய்
ஏங்கி தவிக்கலாகுமா. — இது ஞாயமா (என்ன)
மன்னவர் குலத்துக்கு மார்க்கமிதுவாகுமா
மகாராஜரே விளம்பு மனதில் — சந்தேகமா (என்ன)

பிராணபதி! யாது காரணம் பற்றி இப்படித்தாங்கள் மெய் சோர்ந்து, முகம் வாடி, தத்தளிக்கின்றீர்கள்? ஏதோ சக்ரவர்த்தி அழைத்ததாகச் சென்றிருந்தீர்களே, அங்கு ஏதேனும் விபரீதம்

நடந்ததோ! என்னிடம் தெரிவிக்கலாகாதா? என் ஆருயிரே! அபலையாகிய எனது மேனி துடிக்கின்றதே! தயவுசெய்து சொல்ல வேண்டும் நாதா!

கலி:— பாட்டு. ஷை

(2) அன்பே பெருகியென்னை அணுகி வந்த மயிலே
ஆராத்துயரம் கொண்டேன் அருங்குயிலே
தென்பாயதை விளம்ப சித்தம் கலங்குதையோ
தீயச்செயல் புரிய சிக்கி வாடு ரேனையோ (அன்பே)

என் அன்பிற்குரிய நாயகி அதைச்சொல்லவும் என் நாவெழ வில்லையே! சொல்லுவேனாகில் உன் உயிர் உடலை விட்டு அகன்று விடுமே என்று நான் வருந்துகின்றேன்! என்ன செய்வேன்! ஆயினும் சொல்லுகின்றேன். அந்தச் சக்ரவர்த்தி என்னை அழைத்துக் கபடமாய் என்னிடம் சத்தியம் வாங்கிக்கொண்டு நமது கண்மணி பிலோமினாளை அவனுக்கு மணம் செய்து கொடுக்கும்படி கேட்கின்றான்!

பத்மினி:— ஹா! (கீழே சாய்தல்)

முகாரி. — விருத்தம்.

என்னிருகண்னே கண்ணுள் இருக்கும் மாமணியே கமல
பொன்னிகர் அருமைச்சேயே பூதலமாள வந்த
மண்ணில் யாம் பட்டபாடு மாதாவே நீரறிவீர்
பொன்னைப் போல் கிளி வளர்த்து பூனைவாய் கொடுக்கலாச்சே

ஐயோ! பிராணபதி! என்ன காரியம் செய்யத்துணிந்தீர்கள்! முன்பின் யோஜியாது சத்தியம் செய்து கொடுத்து என் அருந்தவ மணியைக் காட்டிக்கொடுத்தீர்களே! கன்றிழந்த பசு போல நான் கதறும்படியான காலம் வந்துவிட்டதே! கொடிய நெஞ்சம் படைத்த அந்தச் சக்ரவர்த்தி செய்துவரும் அக்கிரமங்கள்

கொஞ்சமல்லவே! எத்தனையோ கற்புமங்கையரைச் சிறையில் அடைத்து வதைத்து கொன்றவனுயிற்றே! எத்தனையோ கிறிஸ்தவ குடும்பங்களை அடியோடு துலைத்த பரம மூர்க்கனல்லவா! இந்த பகுத்தறிவற்ற மிருக ஜென்மத்திற்கோ என் கிளியைக் கொடுக்க மனம் துணிந்தீர்கள்! பிராணபதி! என்ஹிருதயம் பற்றுகின்றதே! பத்து மாதமும் சுமந்து, பெற்றெடுத்து, பாலூட்டி சீருட்டி வளர்த்த என் கொஞ்சுங் கிளியை பூனைவாய் கொடுக்க வைத்தீர்களே! ஹா மோக்ஷவாசிகளே! அர்ச்சிஷ்டவர்களே! எங்களுடைய பரிதவிப்பை ஆற்ற வழிசொல்ல மாட்டீர்களா! அருமையாய் வளர்த்த என் கண்ணுளுக்கு மனதுக்குகந்த மணவாளனைக் கடவுள் தெரிந்தெடுப்பாரென்றல்லவோ இருந்தேன். கிறிஸ்தவ குடும்பங்களை நசுக்கி வதைக்கும் இந்த ராக்ஷஸனுக்கா என் குழந்தை பிறக்கவேணும்! பரமராக்கினியே! பாவிகளுக்கு அடைக்கலமே உ திருக்கரத்தில் ஏந்திய திவ்ய பாலகனின் சித்தமும் இதுவோ!

கலி:— பிரியநாயகி! வீணுய் வருந்திக் கொண்டிருப்பதில் பயனில்லை! நானே நமது செல்வியின் மீது ஆணையிட்டு சத்தியம் செய்து விட்டேன். கபட வேஷதாரியான அந்த சக்ரவர்த்தி என்னை ஏமாற்றி பிரமாணம் வாங்கிவிட்டார். இனி நான் சும்மா இருந்தாலும் அவன் தனது தூதவரை ஏவி ஹிம்சிப்பான். அவ்விதக் கேவலமான ஸ்திதிக்கு வரும் வரை காத்திராமல், இதற்கு உடன்படத்தான் வேண்டும். சில ஆசை வார்த்தைகளை சொல்லி நமது கண்மணிக்கு எடுத்துக் காட்டுவோம். என்ன செய்யலாம்? ஹா! தெய்வபக்தியே குடிகொண்ட அந்தமாசற்ற செல்வம் என்னதான் சொல்லுமோ தெரியவில்லையே! ஹா! உலகரக்ஷகரே என் ஹிருதயம் பிளக்கின்றதே!--போய் வா! பிலோமினுளை அழைத்துவா!

பத்மினி:— கண்ணே பிலோமினா! பிலோமினா! தந்தை உன்னைப் பார்க்கவேண்டுமென்கிறார்.

பிலோ:— ஏனப்பா! என்ன சமாச்சாரம்?

கலி:— கண்மணி! ஓர் முக்கியமான விஷயத்தைக் குறித்து உன்னை அழைத்தோம். அது உன்னைப் பற்றிய காரியமும், எங்களைப் பொருத்த கடமையுமாயிருக்கின்றது. அதற்கு உன்னுடைய சம்மதத்தைத் தெரிந்து கொள்ள ரொம்பவும் ஆவலாயிருக்கிறோம்.

பிலோ:— அப்பா! விஷயத்தைச் சொல்லாது பொதுப் படையாய் பேசுகின்றீர்களே! என்னைப்பற்றிய காரியமென்றும் அதற்கு என் சம்மதம் வேண்டுமென்றும் சொல்லுகின்றீர்கள்! அவ்வித முக்யமான காரியம் இகத்துக்குறியதா? அல்லது பரத் துக்குறியதா? இன்னதென்று சொல்லுங்களப்பா!

கலி:— அறிவில் சிறந்த சிரோன்மணியே! உன்னுடன் தர்க்கம் செய்ய என்னால் முடியுமோ! இதோ சொல்லுகிறேன். நமது சக்ரவர்த்தியாகிய தியோக்லேஷிய மகாராஜர் உன்னைமணம் செய்துகொள்ள வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார். நாங் களும் சம்மதித்து விட்டோம். வணங்கா முடிமன்னனாகிய அந்த சக்ரவர்த்தியை மணம் செய்து கொண்டால், நீயும் சக்ரவர்த்தினி யாவாய். பிறகு எங்கு பார்த்தாலும் பிரஜைகள் யாவரும் உன்னை புகழ்ந்து கொண்டாடும் பாக்யம் பெறுவாய். அதைக் கண்டு நாங்களும் மகிழ்வோம். சகல சுக செல்வங்களும் பெற்று நீயும் வாழ்வாய். கண்ணே! உன் விருப்பமென்ன?

பத்மினி:— என் செல்வமே! உன் முகம் வேறுபட்டு விட் டதே? இருதலைக்கொள்ளி எறும்புபோல் தத்தளித்து வாடும் உன் தந்தைக்கு நீதான் ஆறுதலான வார்த்தை சொல்லவேண்டும்

பிலோ:— அப்பா! என்ன இது! கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல், தாங்கள் இவ்வூருக்கு வந்த காரியம் வேறு. இப்போது தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் காரியம் வேறு. பெற்றோர்களே! எனக்கு மணமுடிக்க எண்ணம் கொண்டீர்களா? கிறிஸ்தவர்களின் மீது துவேஷம் கொண்ட அந்தச் சக்கரவர்த்தியும் என் மீது சித்தம் கொண்டானு? அப்பா மாசற்ற மக்கள் எத்தனையோ பேர்கள் அந்த ராக்ஷஸன் செய்த கொடுமையால் மாண்டு மடிந்தார்களென்று தாங்களே எடுத்துரைத்திருக்கின்றீர்கள். கல்நெஞ்சம் படைத்த கடின சித்தமுடைய அந்தக்கொடுங்கோல் மன்னன் நமது முன்னோர்களையும், இன்னும் சத்திய மறையைப்பின் பற்றின சகல குடும்பங்களையும் அடியோடு வேரறுக்கிறானென்றும் நிர்மலமான ஹிருதயமுடைய எத்தனையோ பேரை அவன் யந்திரங்களில் போட்டு கசக்கிப்பிழிந்து கொல்கிறானென்றும், மாசற்ற பங்க்ராஸ், சிபஸ்தியார், செஸிலியம்மாள், அக்னேஸ் அம்மாள் முதலிய சகலரும் வேத சாக்ஷிகளாய் தங்கள் உயிரை பலியாகக் கொடுத்ததற்கெல்லாம் காரணம் இந்த சக்கரவர்த்தியும் இவனது முன்னோர்களுமே என்று எனக்கு சுவாமிமார்களும், கன்னியாஸ்திரீகளும் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்பேர்பட்டவனுக்கு என்னை மணம் செய்து கொடுப்பதாகவும் வாக்களித்து விட்டீர்களா? அப்பா என் எண்ணத்தையும், தேவ அருளையும் கவனித்தல்லவோ செய்யவேண்டும். இவைகளையெல்லாம் யோஜியாது தாங்கள் என்ன காரியம் செய்தீர்கள்?

பத்மினி:— என் செல்வமே நாங்கள் எது கேட்டாலும் மறுத்துப் பேச வழியில்லாமல் செய்து விடுகின்றாயே! அந்தச் சக்ரவர்த்தி எவ்வளவுதான் பொல்லாதவரா யிருந்தபோதிலும் நம்மட்டில் நமக்கு உபகாரிதான். போரை நிறுத்தி உதவியிருக்கின்றார். ஆகையால் என்ன செய்யலாம். என் கண்ணே!

தந்தையோ முன் பின் யோஜியாது சத்தியம் செய்து விட்டார். நாங்களும் வேறு வழி தெரியாது தத்தளிக்கின்றோம். எங்கள் மனம் ஆறுதலடையவும், இடுக்கண் நீங்கவும் வேறு வழியில்லையம்மா.

பிலோ:— விருத்தம்: கேதாரகௌளம்.

பூலோக மாயைக்காக போர்தனிலு தவினாலும்
தீலோகந் தனில் அவ்வேந்தன் (நமக்கு) திரவியங்கள் தந்தாலும்
சாலோக புவன செல்வம் சகலமும் நமக்கீய்ந்தாலும்
மாலோக பதவி சேர்க்க வல்லனோ தந்தைதாயே?

அப்பா! இந்த மாயப் பிரபஞ்சமாகிய உலகத்திலே ஏழையென்றும், ஐஸ்வரியவானென்றும், தரித்திரனென்றும், சக்ரவர்த்தியென்றும் இருப்பது சகஜமே. அவ்விதம் கடவுள் ஒருவனுக்கு நிறைந்த திரவியமும், குறைவில்லாத செல்வமும், உயர்ந்த பதவியும் கொடுத்திருப்பது எதற்கு? துன்மார்க்க நெறியை விட்டு சன்மார்க்க நெறியில் நடக்கவன்றோ? சிறிய தடாகமும், ஏரிகுளங்களும், வற்றி வறண்டுபோனால் சமுத்திரத்திலுள்ள ஜலமானது ஆவியாக மேலெழுந்து மழையாக வருஷித்து அந்த ஏரிகுளங்களை நிரப்புகின்றதல்லவா? அதுபோலவே, அந்தச் சக்ரவர்த்தியானவர் தன்னுடைய பதவியையும் அதிகாரத்தையும், திரண்ட திரவியத்தையும் அஃதில்லாதாருக்குக் கொடுத்துதவ வேண்டிய கடமைப்பட்டிருக்கின்றார். எவ்வளவுதான் ஏகசக்ராதிபத்யனாக இருந்தபோதிலும், திரண்ட ஆஸ்தியும், அதிகார ஆதிக்கமும் பெற்றிருந்த போதிலும் என் ஆத்துமத்தை மாசற்ற விதமாய் நித்திய மோக்ஷ பேரின்ப பாக்கியத்தில் கொண்டுபோய் சேர்ப்பதற்கு அவருக்கு அதிகாரம் உள்ளதோ? தந்தையே! "எண்ணித் துணிவது கர்மம்" என்பதைத் தாங்களே யோஜித்துப் பாருங்கள்.

கலி:— பாட்டு.

எல்லோரையும் போல எ. வ. மெட்டு.

உன்னையன்றி வேறு செல்வம்
உலகிலேனும் உண்டோ கண்ணே (உன்)

மன்னவனிட்ட கட்டளையால்
வாதைப்படலானேம் மாதவச்செல்வமே. (உன்)

ராஜசம்மந்த மானதாலே
நாயகியும் நீயே கண்ணே
தேசமணைத்தும் ஆளும்பதவி
செப்பொண்ணு வைபோகம்
மாசற்ற கண்ணே ராஜ குல
மாட்சி பழுதாகும் தாட்சணியமாகும் (உன்)

கண்மணி பிலோமினு! உன்னையல்லாது எங்களுக்கு வேறு செல்வமுமுண்டோ? உன்னைப் பிரிந்தும் நாங்கள் உயிர் தரிப்போமோ? என்ன செய்வோம்? ராஜ கட்டளை என்றுதான் தவிக்கின்றேம். ராஜசம்பந்தமாக ஒருசக்ரவர்த்திகேட்கும்போது என்னைப்போலொத்த ஒரு சிற்றரசன் மறுக்கமுடியுமோ? சம்மதிக்கத்தானே வேண்டியிருக்கிறது. ஆகையால் தேசம் ஆளும் வைபவமும், மகத்தானப் பதவியும் பெறக்கூடியது. கண்ணே! கொஞ்சம் யோசித்து தயவுசெய்து உன் மனதை வேறு வழியில் செல்ல விடாது நிதானித்துச் சொல்லம்மா.

பிலோ:- நமஸ்தே எ. வ. மெட்டு.

அம்மா!

திரு மா மரி பயின்ற தேவசுதன்சேசு
அரூப குணமான கணவன் ஆத்துமக்கண் ணுளனம்மா
மாய உலகிலே என்னுடலை

மானிடன் தீண்டானம்மா
தூயபரன் சேசுவிடம் சுகிர்தகற்பை ஒப்புக்கொடுத்தேன்
தீயத்தொழில் ஏனேயிந்த
சேயிழை தன்னையே பொறுப்பீர் (திரு)

(தாய் தந்தையரை வணங்கி) அம்மா! அப்பா! இனி இவ்விஷயமாக என்னிடம் ஒன்றும் பேசலாகாதென்று மிகவும் மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னை மன்னியுங்கள். நான் சென்று வருகின்றேன்.

(இருவரும் மௌனமாயிருத்தல்.)

தூதன்:— பிரபோ! மகாராஜா தங்களை சீக்கிரமாய் அழைத்து வரச்சொன்னர். சுபகாரிய தாம்பூலமாய் இதோ இந்த ஒரு பை பவுனையும் தங்களுக்கனுப்பினர்.

கலி:— இதோ வருகின்றேன். நீங்கள் செல்லுங்கள். ஹே தீனதயாளா! பரமநாயகியே! ஒருவழியும் அறியாது தவிக்கின்றேனே! எல்லாம் உமது சித்தம்.

சீன் 15.

(மாளிகை — அரண்மனை மண்டபம்.)

தியோ:— என்ன கலிஸ்தோஸ் பிரபு! முகவாட்டமாய் வந்திருக்கின்றீரே? யோஜனை செய்யாமல் சத்தியம் செய்து விட்டோமென்ற எண்ணமா? அல்லது உமது புதல்வி மறுக்கின்ருளா? என்ன காரணம்? சீக்கிரம் சொல்லும்.

கலி:— ராஜமகிபா! என்ன சொல்லப் போகின்றேன்! தங்களது கட்டளையை நிறைவேற்ற சக்தியில்லாது

தவிக்கின்றேன். என் புதல்விக்கு எவ்வளவோ ஞாயங்களை எல்லாம் எடுத்துக்காட்டினேன். ஒன்றும் பயன்படவில்லை. முடிவில் தான் எவரையும் மணம் செய்வதில்லையென்று பிடிவாதமாய் சொல்லுகின்றாள்.

தியோ:— விருத்தம்: கல்யாணி

கல்யாணச்சுப நற்சேதி களருவீரென விருந்தேன்
புல்லான ஓர் சிற்றரசன் புதல்வியை நானே கேட்டும்
வல்லானை மதியாதந்த மானையிங்கனுப்பி வைப்பீர்
நல்லான வார்த்தைப் பேசி நானே மணம் செய்வேனே.

ஓஹோ நண்பரே! உம்முடைய சபலமான புத்திக்கு மெச்சினேன். கல்யாணச்சேதி வந்துரைப்பீர் என்று நான் மிகுந்த ஆவலோடு காத்ததுக்கொண்டு இருக்க, அதற்கு நேர் விரோதமாய் எனக்குக் கோபம் வரும்படிக்கான சமாச்சாரம் கொண்டு வந்தீரல்லவா? என் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டு பகுதி செலுத்தும் ஒரு சிற்றரசனுடைய புதல்வியை நானே வலியக்கேட்டும் அதை மதிக்கவில்லையல்லவா? நல்லது என்னை மதியாது பேசின அந்தப்பெண்ணை இங்கே அனுப்பும்? நல்ல வார்த்தைகளைப்பேசி நானே மணம் செய்து கொள்ளுகிறேன். நீர் சென்று வாரும்.— தூதர்களே! உடனே சென்று நமது பட்டத்தரசியின் ரதத்தைக் கொண்டு போய் கலிஸ்தோல் பிரபுவினுடைய புதல்வியை மிகுந்த ஜாக்கிரதையாய் பல்லக்கி லேற்றிக் கொண்டு வாருங்கள்? — கலிஸ்தோஸ்பிரபு! நீர் உம் முடைய புதல்வியை இங்கனுப்பிவிட்டு உம்முடைய சொந்த நாடு செல்லும்.

தூத:— மகாராஜ்! உத்திரவுப்படியே இதோ செல்லுகின்றோம்.

கலி:— அரசவள்ளலே! கொஞ்சம் சினம் தணியக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் தங்களுக்குச்செய்த அபசாரத்தினால் ஓர்விதக் கேவலமான ஸ்திதிக்குக் கொண்டு வந்து விட்டேனாதலின், என்மட்டில் நான் தங்கள் விஷயத்தில் குற்றமொன்றும் செய்யவில்லையே! என் புதல்வியோ மிகுந்த ஞான மார்க்கத்தில் பதில் கூறும்பொழுது நான் என்ன செய்யக் கூடும். நானும் எவ்வளவோ முயன்றேன். எவ்வளவோ புத்திகளையும், தங்களுடைய மகிமையையும் எடுத்துக்கூறினேன். ஒன்றும் பயன்படவில்லை. இல்லற வாழ்க்கைக்கு இசைந்த பெண்ணாகத் தோன்றவில்லை. அவ்வித ஓர் அபூர்வ குண முடைய என் குழந்தையை பலவந்தம் செய்வதென்றால் என் மனம் துணியவில்லையே. சக்ரவர்த்தி அவர்களே! தாங்கள் அன்னியரானது பற்றி இவ்வாறு முனிந்தீர். ஆனால் நானோ, பெற்று வளர்த்த பிதாவல்லவா? அந்த யுவதியை நான் அருந் தவமிருந்து பெற்றேன். பிரபு! "எண்ணித்துணிவது கர்மம்" என்றபடி தாங்கள் கொஞ்சம் யோஜிக்க வேண்டும்.

தியோ:— பாட்டு.

ஸ்ரீராகம். தாளம் ஆதி.

பல்லவி.

போதும் போதும் உபதேசமதனை நிறுத்தும் — ஒரு
போது முமது மொழி யாதும் இனிக்கேளேன் (போ)

அனுபல்லவி.

சீதமுக வதனமாக எனதருகில்
யாதும் பதிலுரைத்திடாது துணிந்ததும் நீர் (போ)

சரணம்.

பாதகம் புரிவதா துணிந்து மரி
யாதை என்னும் உயர் வேதமின்றியெனை
பூதலம் மகிழ நீதமும் அகலக்
காதகம் புரிய சூதினை யடுத்தீர். (போ)

போதும் உம்முடைய வியாக்கியானம். இதுகாறும் என்னுடைய சிற்றரசனுய் இருந்தும் என் குணதிசயத்தையும், என் அதிகாரத்தையும் நீர் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை யல்லவா? நான் யார்? உம்மைப்போல் ஒரு சிற்றரசன் என்று எண்ணினீரோ? மரியாதையாகச் சென்றுவிடும். இனி நீர் இங்கிருப்பீராகில் உம்மைசிறைப் படுத்திவிடுவேன். சீக்கிர மாகச்செல்லும். உம் சீக்கிரம்.

(கலிஸ்தோஸ் மௌனமாய் தலைவணங்கிச் செல்லல்.)

சிறைவாய்தனில் எ. வ. மெட்டு.

பல்லவி.

அநியாயம் செய்குறுர் அன்புள்ள தாயே. (அநி)

அனுபல்லவி.

வினை மூண்டதாலே வேதனை யானேன்
வேலி பயிரழித்தால் விளைவதெப்போ. (அநி)

தொகையறு.

மனையாளை வஞ்சித்து மகவைப் பகைத்துமே
மனு நீதி குன்றினே னையோ
தினை போன்ற கண்ணீர் என் மாதா சிந்திடில்-உங்கள்
செருக்கெல்லாம் அழிந்திடாதோ

தீயத்தொழிலை விடுவீர் க்ஷேமமடையப்படுவீர்
சென்னெல் விளைந்த பூமி சீர்கெட்டதே. (அநி)

சீன் 16.

(தனி மாளிகையில் தாயும், பிள்ளையும்.)

பத்மி:— என் கண்ணே பிலோமினா! சக்ரவர்த்தியிடம் சென்ற உன் தந்தை இன்னும் வரவில்லையே. என் மனம் பதைக்கின்றதே. கொடிய ஹிருதயமுடைய அந்தச்சக்ரவர்த்தி உன் தந்தையவர்களை என்ன செய்தானோ! தெரியவில்லையே. இருதலைக்கொள்ளி எறும்பு போல் எங்கு சென்று தவிக்கின்றாரோ.

பிலோ:— அம்மா! ஏன் கவலை கொள்ளுகின்றீர்கள்? தந்தைக்கு ஒரு கெடுதியும் வராது. அப்படி ஏதாவது தந்தையை அந்த அரசன் ஹிம்சிப்பானால் நானிருக்கின்றேன். உடனே சென்று தந்தையை மீட்டுக் கொள்ளுகின்றேன். கவலைப் படாதீர்கள்.

தூதர்:— அம்மணீ! தங்களை உடனே அழைத்து வரும்படியாக மகாராஜா உத்திரவு. வெளியில் ரதம் தயாரா யிருக்கிறது.

பிலோ:— அப்படியா தூதர்களே! என் தந்தை எங்கே?

பத்மினி:— காவலரே! என் பதி அங்குதானிருக்கின்றாரா? அல்லது திரும்பி வந்து விட்டாரா? அவர் இங்கு வந்து, நாங்கள் விபரம் தெரிந்துகொண்ட பின் உங்கள் ஏவலை நீங்கள் செய்யலாம். அதுவரையிலும் கொஞ்சம் பொறுங்கள்.

தூதர்:— அதுமுடியாது. உடனே தங்கள் பெண்ணை பல்லக்கில் ஏற்றிக்கொண்டுவந்து சேர்க்கும்படியாய் ராஜகட்டளை. அதுவுமல்லாமல் உங்கள் புதல்வி அங்கு வந்து சேராவிடில் தலிஸ்தோஸ் பிரபு சிறைப்படுத்தப்படுவார்.

பத்மி:— ஹா மோக்ஷராக்கினியே! இதுவும் உமக்குச் சித்தமோ.

பிலோ:— அம்மா என் இதற்காக இவ்வளவு மனம் பேதலித்துக் கலங்குகின்றீர்கள்? என்னை அந்தச்சக்ரவர்த்தி அழைத்து வரும்படி சொன்னாலென்ன சேசுவின் திரு ஹிருதயத்தின் ஞான சுடர்ஒளியால் அந்த அரசனின் அஞ்ஞான இருளை சுட்டெரித்து விடுகிறேன். அமல உற்பவியின் அடைக் கலத்தில் என் கற்பை வைத்திருக்கின்றேன். கேவலம் அநித்திய மாய உலகத்தையாளும் ஓர் அரசனுக்குப் பயந்து நித்திய மோக்ஷராஜனை மறந்து விடுவேனோ? வேண்டாம் கவலையை விடுங்கள்.

பத்மி:— என்னருஞ்செல்வமே உன்னை விட்டு நானும் பிரிந்திருப்பேனோ? என் கண்ணே! கற்பின் கண்ணாடியே! பத்துமாதமும் சுமந்து பெற்ற என் வயிறு பற்றி எரிகின்றதே. "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்" என்பதற்கு ஒப் பானதே. இனியும் என்னால் துயர் சகிக்கமுடியுமோ. என் பசும் கிளியே! பவளமுத்தே! உன்னைப் பார்க்கப் பார்க்க என் ஹிருதயம் கொந்தளிக்கின்றதே. என்னை விட்டுப் பிரியவும் துணிந்தனையா? தந்தையும் இங்கில்லையே. 'நான் என்ன செய் வேன். திரும்பவும் உன்னை நான் பெறவோ! என் கண்ணே! கட்டிக்கரும்பே கண்ணே! கண்ணே! (தேம்பி அழுதல்.)

பிலோ:— உடல் நோக, உந்தி சரியப்பெற்று வளர்த்த என் தாயே! தாங்கள் இருக்கும் மனநிலை நான் அறிந்தேன். அம்மா! தேவதாயின் அடைக்கலத்திலிருக்கும் எனக்கு ஒரு விதமான கெடுதியும் வராது. தைரியமாய் விடையளியுங்கள். நான் சென்று சக்ரவர்த்தியை ஜெயித்து உங்கள் சஞ்சலத்தை நீக்குகின்றேன். நான் போகாவிட்டால் தந்தையை

சிறைப்படுத்தி விடுவார்கள். என் அருமைத்தாயே! (தாயின் இரு கரங்களையும் எடுத்து தன் கன்னத்தில் ஒத்திக்கொண்டு) பத்து மாதமும் சுமந்து, அன்ன ஆகாரமும்மறந்து, நித்திரையின்றி மெலிந்து, என்னைப்பெற்று, பாலூட்டி, சீராட்டி, வளர்த்த, என் தாயே! கலங்க வேண்டாம். என்னுடைய மன உறுதியையும் தாங்கள் கலைக்க வேண்டாம். அம்மா!, அம்மா! நான் சென்று வருகின்றேன். (போகிருள்.)

பத்மி:— ஹா!

பாட்டு.

ராகம்: முகாரி. தாளம்: ரூபகம்

கண்ணே என் கண்மணியே காண்பதெப்போ இனிமேல்
உன்னை விட்டுயிர் நான் தரியேன் கண்மணி—கண்—கண்
கன்றிழந்த பசுப்போல் கதறிக் கதறி மாழ
சென்ருயே என்னை விடுத்து கண்மணி--கண்மணி--கண்மணி.

(மூர்ச்சித்து கீழேசாய்கிருள்.)

சீன் 17.

(தியோக்லேஷியன் மதுபானமருந்தி சோபாவில் சாய்ந்திருத்தல்)

தூதர்கள்:— மகாராஜ்! இதோ அழைத்து வந்திருக்கிரும்.

பிலோ:— அரசே! வந்தனம். தாங்கள் என்னை அழைத்ததாக தூதர்கள் தெரிவித்தனர். யாது காரணத்திற்காகவென்று தயவுசெய்து சொல்ல வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தியோ:— இளம்பாவையே! உன் தந்தை நிமித்தம் அடங்காக்கோபம் கொண்டிருந்த நான் இப்பொழுது உன்னை கண்டமாத்திரத்தில் மகுடி கேட்ட சர்ப்பம் போல் என்

சினம் தணிந்து உன் இனிய சொல்லால் என் செவிகள் ஆனந்தமடைய, உன்கமலமுக வதனமும், பவளவாய்ச் சொற்களும் என்னைப் பரவசமாக்குகின்றன.

பிலோ:— பிரபுவே! இந்த அநாவசியமான மொழிகளையும், ஸ்தோத்திர வார்த்தைகளையும் நான் விரும்பவில்லை. ஆகவே என்ன காரணம் பற்றி தாங்கள் என்னை அழைத்தீர்களென்று மாத்திரம் சீக்கிரமாகச் சொல்ல வேண்டும். என் தந்தை நிமித்தமே தங்களது ராஜ கட்டளைக்குப் பணிந்து வந்தேன்.

தியோ:— பாட்டு.

ராகம்: மோகனம். தாளம்: ஆதி.

பல்லவி.

பெண்ணே உன்னைப் பிரிய மனமில்லை
பிலோமினாள் இது சுபநாள் (பெண்)

அனுபல்லவி.

கண்ணொடு கண்ணினைக் கண்டு பித்தானேன்
கனவிலும் நினைவிலும் கருதிமெலிந்தேன்
உன்னொடு நான் உறவாட நினைந்தேன்
ஓதிடுவாய் யென தாவல் மிகத்தானே (பெண்)

பெண்மணி! உன்னை நான் அன்று கண்ட நாள் முதல் இது பரியந்தம் வாழாயிருந்தேன். சதா உன் சித்தப் பிரம்மையே கொண்டிருந்தேன். ஆதலின் மறுமுறை உன்னை கண்டு வார்த்தையாடும் பாக்கியம் என்று கிடைக்குமோ என்று காத்திருந்தேன், ஆகையால் மாதவமணியே!

சரணம்.

சுந்தர தேக உல்லாச வைபோகம்
சுகுணமுடி புனைந்து சுகம்பெரும் பாக்யம்
சந்திரவதன முண் டாகும் சிலாக்யம்
தருதுவேன் அறிவையே ஒரு மொழி வாயால்
சாற்றிடுவாய் — சின — மாற்றிடுவாய் — மன
தாகமதை நீ நீக்கிடுவாயே
தாமதமினி உனக்கேது முண்டோ சொல்
தயவு செய்திடுவாய் மனமுவந்து தானே (பெண்)

உல்லாச வைபோகியாய் ராஜமுடிபுனைந்து சுகிக்கும் பாக்கியமான சக்ரவர்த்தினியாகும் பதவியை உனக்குக்கொடுக்க எண்ணங்கொண்டேன். ஆகையால் தாமதம் செய்யாமலும், தடைசெய்யாமலும் என்வேண்டுகோளுக்கிணங்கி ராஜபோகமும், ராஜசௌந்தர்யமும், ராஜரீகமும் நிறைந்த ஒரு கெம்பீரமான பதவியை ஏற்க தடை செய்யாது சம்மதம் கொடு.

பிலோ:— (பாட்டு.) சரவணபவ எ. வ. மெட்டு.

பல்லவி

வீணான யோஜனை வேண்டாம் என் ராஜனே (வீணா)

அனுபல்லவி.

காணாது மறையும் காணில் சம்பாவனை
காயமே நிலையா கபட சோதனை (வீணா)

சரணம்.

ராஜ சுக செல்வம் ஜலத்தினலையே
ராஜ சௌந்தர்யம் ஜலக்குமிழியே
ராஜ சரீரமோ ஜலத்தின் எழுத்தே
நாடினே னல்லவே தேடினே னல்லவே. (வீணான)

அரசே! வீணான எண்ணம் கொண்டு ஏன் பேரானந்தம் அடைகின்றீர். கனவு போன்ற மானிட வாழ்க்கையும், இந்த

ஸ்தூல சரீரமும், எத்தனை நாளைக்கு நிலைக்குமென்று எண்ணுகிறீர்? காணாது க்ஷணத்தில் மறையும் கபட நாடகம் போன்ற இந்த மாய உலகில் ராஜனென்றும், நீசனென்றும், ஐஸ்வரியனென்றும், ஏழையென்றும், வலியவனென்றும், எளியவனென்றும், கடவுள் படைத்துக்காத்து வருகின்றார். இத்தகைய ஜென்மமெடுத்த சகலருமே மாண்டு மடிந்து மண்ணோடு மண்ணாகாமல் நிலைத்து நிற்கப்போகின்றார்களா? இவ்வளவு ஒய்யாரமாகப் பேசும் தாங்களும் தங்கள் பதவியும் எவ்வளவு நாள் நீடித்திருக்குமென்று எண்ணுகிறீர்? ராஜபோகமும், ராஜதேகமும், ஜலத்தின் அலைக்கும், குமிழிக்கும் ஒப்பானதே ஒழிய நீடித்திருக்குமோ? இப்பவோ, பின்னையோ. இன்னும் சற்றுநேரத்திலோ இந்த உலகத்தில் உள்ள சகலரும் திடீரென இறப்பார்களென்பது திண்ணம். இஷ்டம்போல் மனம்போன போக்கெல்லாம் புத்தியை செலுத்தி, தின்று கொழுத்து, சடலத்தை வளரச்செய்து, ஞானம், அறிவு இல்லாமல் கடவுள் என்ற பயமும் போய், நடைப்பிணங்களாய் வாழ்ந்து, மோக இச்சையில் ஈடுபட்டு, வெறி பிடித்தலைய, தமது சரீரத்தை துர்ப்பிரயோஜனம் செய்வதினால் என்ன மகிமை? அரசே! வேண்டாம். தாங்கள் என் தந்தையைக் கடிந்து கொண்டதற்கும் நான் மிகவும் வருந்துகின்றேன். அதுவும் போனாலும் போகட்டும்! இப்பொழுதாவது தாங்கள் என் வேண்டுகோளுக்குச் செவிச்சாய்த்து கொண்ட எண்ணத்தை விடுத்து என்னை அனுப்பிவைக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

தியோ:— விருத்தம். அடாணா.

இளமையிலுனக்கு வந்ததேனோ இப்பிடிவாதம்
நலமிகும் பருவக்கால நாளையே வீணாக்காதே
அளவரும் சுக உல்லாசி யாக நீ வாழ்வாய் பெண்ணே
பல பல விதமாய்ப் பேசி பாசத்தைக் கெடுத்திடாதே

பெண் பேதையே! இந்த இளமைப்பருவத்தில் உன் ஞான மெல்லாம் நிலைக்குமா? உன்பருவக்காலத்தை ஏன் வீணுக்கு கின்ருய்? உன்னை அன்று நான் கண்டது முதல் நான் படும் கஷ்டமும், அல்லலும் பொறுக்க முடியவில்லை. மனச் சமாதான மின்றித் தவிக்கின்றேன். என் கவலையை நிவர்த்தி செய்வாய் ? அதனுல் உனக்கும் சுபிக்ஷமுண்டு. ஆகையால்

ராகம்: அடாணு. தாளம் ஆதி.

1. பெண்ணே பெண்ணே பேரா வலாகி வாடினேன் (பெண்)
சொன்னேன் சொன்னேன் சல்லாபி எத்தனை
சுணங்காது நல் மணம் பேசுவாய் (பெண்ணே)

2. ராஜரீகத் தாலே நல் ராணியாகுவாய்
தேஜோமய சிம்மாசனந் தனில்
தினந் தேற்றுவேன் உனைப்போற்றுவேன். (பெண்ணே)

பொன்மயமான சிம்மாசனமேறி ராஜரீகம் செலுத்தும் பாக்கியம் அடைவாய். என்ன சொல்லுகின்ருய் ?

பிலோ:— விருத்தம்: கீர்வாணி

1. ஆமென்ற திருவாயால் அம்புவி அனைத்தும் தாங்கி
ஆண்டு காத்தளிக்கும் நாதன்
பூமண்டலந்தனில் பொல்லாத துஷ்டரை
புனிதராக்கப் பிறந்து
காமாந்தகாரரால் கல்வாரி தான் நடந்து
கடும் சிலுவைதனைச் சுமந்து
தீமாந்தர் பாவத்தால் சாட்டை சவுக்கடிகளால்
திரு ரத்தம் பெருகியோட

2. நாதநாமக்ரியை

கோரமாய் முண்முடி திருச்சிரசி லழுத்தவே
குடங்குடமாய் குருதி சிந்தி

பாரமாம் சிலுவையில் பதைத்திட தொங்கிட
பாடுபட்டு மரித்தார் எனக்காய்
தீரமாய் மூன்றும் நாள் திரும்பவும் உயிர்த்த அந்த
சேசுவின் திருப்பாதத்தில்
ஆரமாயெனது கற்பை சீலமாய் ஒப்பித்துவிட்டேன்
(என்னை) அல்லல் படுத்தாதீர் அரசே!

ஆறு லக்ஷண கர்த்தனை, ஏகபிதாவின் சுதனுய்ப் பூலோகத்தில் அவதரித்த அந்த சேசு ராஜனையே என் மணவாளனுகக்கொண்டு என்னுடைய தூய்மையான கற்பை அந்த சுந்தர நாதனுக்கு ஒப்புக்கொடுத்து விட்டேன். என்னைப்பற்றித் தாங்கள் வீணுய் நினைந்து மனமுடைய வேண்டாம். தங்களுடைய கட்டளைக்கும், எண்ணத்துக்கும் கீழ்ப்படிய நான் தயாராயில்லை. வீணுய் என்னை வற்புறுத்த வேண்டாம்.

தியோ:—(பாட்டு) ராகம்: மோகனம். தாளம்: ரூபகம்.

பல்லவி

ஏனோ உனக்கித்தனை மதி
ஈனத்தனமாக ஞானம் பேசுகின்ருய் (ஏனோ)

அனுபல்லவி.

மான மிழந்து மதி குலைந்திடாதே
மார்க்கமல்ல நீ மொழிவதுந்தகாதே
மாதவி—ஓதுவாய்—நீதயோ
மாரான சிந்தனை நேரானதல்லவே (ஏனோ)

சரணம்.

ராஜகட்டளையைத் தப்பமுடியாது
நானென் செய்வேனென் றுனக்குத் தெரியாது
பாசமே—நேசமே—வாசியே
பாழன உன் மதக் கோலமதை விடு (ஏனோ)

ஏ! பெண்ணே! உனக்கேன் இந்தப் பிடிவாதம். உன்னுடைய

ஞானமும் அறிவும் எனக்குத் தேவையில்லை. என்னை யாரென்றும், என்னுடைய ராஜரீகம் எத்தன்மையதென்றும் தெரிந்திருந்தால் நீ இவ்வாறு பேசமாட்டாய். கேவலம்! உன்னை ஒரு தூசிக்கு சமானமாக எண்ணியிருக்கின்றேன். என் தேசத்தில் கிறிஸ்து மார்க்கத்தைத் தலையெடுக்கவொட்டாது அடியோடு வேரறுக்கப் பண்ணும், என்னிடத்திலேயே உன் ஞானத்தைக் காட்டுகின்றாய் அல்லவா? வேண்டாம். நான் சொல்வதைக் கேள். ராஜ கட்டளையைத் தப்ப உன்னால் முடியும் என்று எண்ணாதே?

பிலோ:— ராகசுதாரஸ எ. வ. மெட்டு.

பல்லவி.

ராஜ கட்டளை என்னை சாக நீதி சொன்னாலும்
சம்மதமே தானே (ராஜ)

அனுபல்லவி.

மோக்ஷ கட்டளை கொண்டேன்
முடியாது முடியாதரசே (ராஜ)

சரணம்.

பரம பிதாவின் வலப் பாரிசத்தினில் வீற்ற
நரமதை மீட்ட சேசு நாயகனே என்னுதன். (ராஜ)

வேந்தே! ராஜகட்டளையானது என்னை சாகும்படி சொன்னாலும் இதோ தயாராயிருக்கிறேன். உம்முடைய ராஜகட்டளை என் சரீரத்தைப்பற்றியது. ஆனால் இதனுள் அடங்கிய ஆன்மாவிற்கு மோக்ஷ கட்டளையொன்று உத்திர விடுகின்றது. ஆகையால் மோக்ஷ பேரானந்த மண்டலத்தில் ஜெகஜ்ஜோதியாய் விளங்கும் நித்திய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் சேசுராஜனே என் நாதன். அநித்திய வாழ்வான உமது எண்ணத்துக்கு நான் உடன் படேன். இது நிச்சயம். வீணில் ஏன் பிதற்றுகின்றீர்.

தியோ:— விருத்தம்: மோகனம்.

எத்தனைதான் புத்திமதி உரைத்திட்டாலும்
எத்தனையோ விசைகள் உன்னைக்கடிந்திட்டாலும்
அத்தனையும் சற்றேனும் கேட்டிடாத
ஆ கொடிய பாதகி அடங்காப் பிடாரி.

இத்தரையில் நான் உரைத்த மொழி கேளாது
ஏதேதோ பேசுகிறாய் பேயே மிக்க
உத்தமிபோல் பாசாங்கு பண்ணிவந்தாய்
ஓடுவாய் சிறைதன்னில் கடந்து சாவாய்.

ஹே அற்பப்பேதையே! எவ்வளவோ முறை உன்னை நான் கெஞ்சிக்கேட்டும் என்னைக் கேவலமாய் எண்ணினையோ? அடங்காத ஆணவங்கொண்ட பேயே! உன்னை நான் லேசில் விடுவேனென்று நினைத்தனையோ?—யார் அங்கே காவல்? இவளைக் கொண்டு போய்க் காராகிரகத்தில் அடையுங்கள்.

(காவலர் அழைத்துச் செல்லல்.)

சீன் 18.

(ஜெயில்— பிலோமினம்மாள் முழந்தாளிட்டு கொஞ்ச நேரம் ஜெபம் செய்து பின்)

பிலோ:— பாட்டு திவ்ய தெரிசனம் எ. வ. மெட்டு

பல்லவி.

திருவுள மிரங்கா ததும் ஏனோ
என்னை யாட்கொள்ளத் (திரு)

அனுபல்லவி.

அரும் மறை போற்றுமுன் தெய்வீகந்தன்னை
அறிந்துணர்வா ரில்லை யின்னும் (திரு)

சரணம்

பாவம் நிறைந்திடும் பந்தமே வாழ்வு
பாரினிலேது கண்டா ரோ
சேவடி போற்ருத் தீயர்களா யிந்த
ஜெகமதி லேன் பிறந்தா ரோ. (திரு)

(ஜெயில் காப்போனை ஜாடை செய்து போகச்சொல்லி)

தியோ:— (ஜெயிலுக்கு வெளியில்) இனிமேல் புத்தி வந்திருக்கும். முன்னேயே சரி என்று சொல்லியிருந்தால் என்ன? வீம்பு பேசி இப்பொழுது கஷ்டப்படுவானேன். நல்லது அருகில் சென்று பார்ப்போம். (ஜன்னல் வழியாய்) பிலோமினு! கவலைப் படாதே. நீயே தான் கஷ்டத்தை வருவித்துக்கொள்ளுகிருய். கிடக்கட்டும். எழுந்திரு போகலாம். முன்பே சம்மதித்து இருந்தால் நான் ஏன் கோபம் கொள்ளுகின்றேன்? (பிலோமினுள் மௌனம்) என்ன ஒன்றும் பேச மாட்டேனென்கிருயே? ஓஹோ! நாணமாயிருக்கின்றதா? வாஸ்தவம். ஸ்திரீகளுக்கு நாணம் சகஜம்தானே! (உறக்க) கண்ணே! எழுந்திரு.

பிலோ:— அரசே! உமக்கென்ன சித்தப்ரம்மையா? அல்லது புத்தி தடுமாற்றமா? ஏன் வீணுக உளருகின்றீர்? உமக்கு சொல்ல வேண்டியவையெல்லாம் முன்பே நான் சொல்லி விட்டேன். நீரும் கடுஞ்சீற்றம் கொண்டு என்னைக்காராக்கிரகத்தில் அடைத்து விட்டீர். இனி உமக்கென்ன இங்கு வேலை? திரும்பிச் செல்லும்.

தியோ:— ராகம்: கமாஸ். தாளம்: ரூபகம்

பல்லவி.

கால தாமதம் ஏனோ செய்கின்ருய்
கட்டழகி — தகாதே — மாதே (கால)

அனுபல்லவி.

சீலமா யென்னை மணந்திடில்
தீதோ—வாதோ —ஏதோ — ஓதுவாய் (கால)

சரணம்.

இணக்கமாய் யென் மனக்குறை தன்னை
ஏனோ தீர்த்தி டாயோ பெண்ணே
கணக்கில் லாத ராஜ போகத்தைக்
காலா லே உதைக் காதே வீணிலே. (கால)

பாவையே! ஏன் வீண் காலம் போக்குகின்றாய்? என்னை மணம் செய்துகொள்வதினால் என்ன தீது? உனக்கேன் இந்த வாது? என் மனத்தினுள்ளக் குறையை நீக்கி அளவிறந்த ராஜ போகத்தை சுகிக்காது காலால் உதைத்துத் தள்ளுவது போல் என்னை அலக்ஷியம் செய்யாதே.

பிலோ:— பாட்டு, சுருட்டி. தாளம் ஆதி

ஏனோ மதியீனமே ராஜனே உமக்

அனுபல்லவி

காணாது மறைந்திடும் காமாந்த காரமேன் (ஏனோ)

சரணம்.

1. தானாயனாதி முதல் சேனாதி பதியான
வானாள் பரன் குழந்தை நானோ உமைக்கண் பாரேன் (ஏ)

2. நாடாள் மன்னவர்க்கிது கூடாது கூடாது
காடாள் கடும்புலியுன் காடுமெத்த மேன்மை (ஏனோ)

ராஜனே! உமக்கேன் இந்த மதியீனம்? க்ஷணப்பொழுதில் மின்னலைப்போல் தோன்றி மறையும் இந்த மானிட வாழ்க்கைக்கு நான் சம்மதிப்பேனென்று நீர் கனவிலும் கருத வேண்டாம். வீணாக ஏன் காமாந்தகாரம் பிடித்தலைகின்றீர்? தானாய், அனாதியாய், சகலத்திற்கும் ஆதி காரணராய், சத்தியசொரூபியாய் மோக்ஷப்பிரதாபியாய் வீற்றிருந்து என்னை நோக்கும் இந்த பூலோக சேனைக்கு அதிபதியான பரலோக ராஜனுடைய பாதார

விந்தத்தை இருகப்பிடித்த நானே உம்மைக்கண் நோக்குவேன்? உமது கேவலமான எண்ணத்தை விட்டு அகன்றுபோம். நாட்டுக் கதிபதியென்றும். நற்காவலனென்றும், ஜனசமூகப் போஜ னென்றும் சொல்லப்பட்ட ஓர் ஸ்தானத்தில் இருக்கப்பட்ட நீரே நாட்டுக்குத் தீமைவிளையச் செய்து, அக்ரமவழியில் நடப்பது முறையோ? இதைக்காட்டிலும் துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் காடு மேன்மை பொருந்திய தல்லவா?

தியோ:— இங்கிருக்கானு எ. வ. மெட்டு.

பல்லவி.

உன்னையே விடேன் என்னைமதியாத பேதாய்
சொன்ன சொல் தவறிடேனே பண்ணியே பலவந்தமாய் (உன்)

அனுபல்லவி.

இன்னமும் நீ இருக்கும் நிலை தெரியாது
எண்ணங் கொண்டாயிகழ எனை மதிக்காது
கன்னிகை யென்றுன்னைக் கருதிப் பாராது
காட்டுறேன் காட்டுறேன் பாருன்
மேட்டிமைத் தனத்தை யிப்போ (உன்)

சீ! சீ! பைத்தியக்காரி உன்னை நான் எவ்வளவோ வேண் டியும் எவ்வளவோ கெஞ்சி மன்றுடியும் என்னை மதிக்காது ஏளன மாய்ப்பேச துணிந்தனையா? நீ இருக்கும் நிலைமைத் தெரியாமலும் என் சினம் அறியாமலும் பேசத் துணிந்தனையோ? ஆஹா! (பல்லைக் கடித்து) அவ்வளவு ஆணவமா உனக்கு? உன்னை சும்மா விட்டு விடுவேனென்று நினைத்தனையா? இதோ உட் புகுந்து உன்னை என்ன செய்கிறெனென்று பார். யாரிங்கே காவல்? (பரபரப்பாய் காவலனைத் தேடிச்செல்லுகின்முன்.)

பிலோ:— எதுகெதிராகு எ. வ. மெட்டு.

பல்லவி.

பாவிக் கடைக்கலமே என் தேவ தேவா (பாவி)

அனுபல்லவி.

கூவி யழைத்தேன் கோதைகண் பாரும்
தேவா—தேவா—தேவா என் தேவா (பாவி)

சரணம்.

ஒண்டியாய் இங்கே ஒருவரும் இல்லை
ஓ தயாபர கருணாகர தேவா
உருவாய் மனுவாய் உதித்த என் நாதா
ஓடி வாரும் வாரும் என் தேவா. (பாவி)

(மூர்ச்சித்து கீழே சாய்தல்.)

(காவலன் கதவைத்திறக்க நியோக்லேஷியன் வெறிபிடித்தவனாய் உள்ளே சென்று பிலோமினாளை அணுகி (கையை நீட்ட) அனல் ஜ்வாலை வீசுகிறது. அகல வந்து மறுபடியும் நெருங்கி திரும்பவும் பின்னடைந்து கீழே வீழ்கிறான் அடங்காதசினம் கொண்டவனாய்)

ஹா! என்ன இது? என்ன இது? உம்! நிஜமாகத்தானா! அல்லது நினைவா! அன்றி சித்தப்பிரம்மையா! என்ன ஆச்சர்யம் மாயமா! மந்திரமா! பேயா! அல்லது பெண்ணுருக்கொண்ட பூதமா! (மெல்ல எழுந்து பற்களைக்கடித்து) ஓஹோ! இவ்வளவு மாய ஜாலவித்தை கற்றவளா நீ? அதனால் தான் அவ்வளவு ஆணவங்கொண்டு உன்னெஞ்சம் அஞ்சாது என்னுடன் வார்த்தையாடினையோ? உனக்கு நான் சிறுமைப்பட்டவனென்று எண்ணாதே!

விருத்தம்: மோகனம்.

யாரடா காவலிங்கே ஆக்ஞை தானிடுவேன் கேளீர்
வீரிட இவளைக்கொண்டு விலங்குகள் தளைகள் பூட்டி
சேரடா பெரும் இருண்ட சிறைதனுக்கடித்து ஓட்டி
பாரடா உணவிடாமல் பாவையைக் காவல்செய்வீர்.

அடே தூதர்களே! இந்த மாயா ஜாலியை இருகரங் களிலும் இருப்புச் சங்கிலியைப்பூட்டி இருண்ட சிறைச்சாலைக்கு இழுத்துச்சென்று, நாற்பது நாளைக்கு அன்ன ஆகாரமில்லாது காவலில் வைத்து வாட்டுங்கள். உம் சீக்கிரம். அவ்வளவு மதமா உனக்கு? (போகிறான்)

சீன் 19.

பிலோ:— பாட்டு. (இருண்ட சிறை.)

என்றைக்கு சிவ கிருபை. எ. வ. மெட்டு

பல்லவி.

தேவபாலகனின் தாயே ஏழையென்
சித்தமதனை யீடேற்றும்—தாயே (தேவ)

அனுபல்லவி.

பாவி அரசன் வந்து பயங்காட்டி மிரட்டுறான்
கூவிக்கதற வைத்து கொடும் வாதை புரிகின்றான். (தேவ)

சரணம்

தந்தை தாயாரும் என்னை தனியேவிட்டு சென்றார்கள்
சொந்தப் படுத்தி யிந்த சூதனிடம் விட்டார்கள்
சந்தைச் சரக்குபோல தரகு பெற்றுச் சென்றார்கள்
சண்டாளன் வந்து யென்னை பெண்டாளவே நினைத்தான் (தே)

(அரசன் தோன்றி ஜாடை செய்ய இரண்டு வீரர்கள் ஜெயிலுக் குள் புகுந்து சவுக்குகளினால் வேண்டிய மட்டும் அடித்து ரத்தம் பெருக வீழ்த்திச் செல்லுகிறார்கள்.)

(கீழே விழுந்து கிடக்கும் பிலோமினாள் மெள்ள எழுந்து மண்டியிட்டு)

பிலோ:— விருத்தம்: கேதாரகௌளம்

பெற்ற தாயினும் மேலாய் பேரன்பு நிறைந்த தாயே
முற்றிலும் சகிக்கொணுத மூர்ச்சையாகுதே தாயே
குற்றுயிராக யென்னைக் கொடியர்களடித்ததாலே
பற்றியே நோகுதம்மா பார்த்திருப்பதுவுமே னம்மா.

(மூர்ச்சித்து கீழே விழுதல்.) (தேவ மாதா காட்சி.)

தேவமாதா பாட்டு.

ராகம்: மாண்டு. தாளம்: ஆதி

சுகுண சௌந்தரி பிலோ—மி—ஞு—ளே தூயவிண்ணுளே
மௌன சுசீலி—மறையதின் வேலி—மாசில்லாத லீலி (சுகு)

அநித்திய வாதை அகன்ற பின் மோக்ஷம்
அடைகுவாய் க்ரீடம் சூடி
திரித்துவ சுதனும் சேசுவைத் தந்தோம்
தேருவாய் நீ கரத்தேந்தி
சிறிய பரிசுத்த சிங்கா—ரி—வீ—ரி தேவ பரன் மகிழும் (சுகு)

(காட்சி மறைகிறது. ரத்தத்தில் தோய்ந்து கிடக்கும் பிலோமினம்மாள் மாசற்ற மேனியாய் ரூபவதியாய் விளங்குகிருள்.)

தூதர்கள்:— (காவலர்கள் வந்து ஜெயிலுக்குள் நோக்கி ஆச்சரியமுற்று, அரசனுக்குத் தெரிவிக்கச் செல்லுகிருர்கள்.

(அரசன் தோற்றம்.)

தியோ:— பாட்டு. கார்த்திகேயக் காங்கேய எ.வ.மெட்டு.

பல்லவி. (துரிதகாலம்.)

ராஜ சட்ட மவமான முற்றதல்லவோ இனி
நான் விடேன் விடேனே. (ராஜ)

அனுபல்லவி

தேச முற்றும் மதியாது எந்தனை
தீமை தீமை யென்றெந் நாமந்தனை யிகழ (ராஜ)

என்ன ஆச்சரியம்! ரத்த உதிரம் பெருக இரண்டு வீரர்கள் கை துவள மாரி மாரி சவுக்குகளால் அடிக்கப்பட்ட இவள் மேனியானது இப்பொழுது பரிசுத்தமாகக் காண்கிறதே! உடம்பில் ஒரு காயமுமில்லையே! இவள் மாய வித்தைக்காரியோ! அல்லது பெண்ணுருக்கொண்ட பேயோ! இவள் பால் நான் செலுத்தும் ராஜ சட்டங்கள் யாவும் சின்னபின்னப்பட்டு பயனற்றதாய் விடுகின்றதே. இனி இவளை இவ்வாறு வதைத்துக் கொண்டிருப்பேனாயின் பிரஜைகள் யாவரும் இதைக்கண்டு தீமை தீமையென்றும், கொடிது கொடிது, என்றும் என்னையல்லவோ தூஷிப்பார்கள். இனி இவளைக்கடைசி முறையாக ஒழித்து விடுவதே மேல். — காவலர்காள்!

சரணம். (துரிதம்)

பாரமான நங்கூரந்தன்னையப்
பாவைகழுத்தில் கட்டுங்கள் பின்
ஆரவாரமாய்த் தைபர் நதியென்ற நம்
ஆற்றிலவளைத் தள்ளுங்கள்
வீர சூரர் புடை சூழ நில்லுங்கள்
வீதி தோறுமலங்கோல மாயிழுங்கள். (ராஜ)

(காவலர்கள் கதவைத் திறந்து சங்கிலியைப் பிடித்து இழுத்துச்செல்லல்.)

சீன் 20

(தைபர் நதி) — ஓடம் பாட்டு.

(பிலோமினம்மாளை ஓடத்திலேற்றி)

ஏலேலோ ஏலேலோ ஐலஸா சாமி— ஐலஸா
ஏலேலோ ஏலேலோ ஐலஸா—சாமி
ஊரப்பை நம்பி ஏலேலோ ஜலமிருக்க ஐலஸா
ஜலத்தை நம்பி ஏலேலோ வயலிருக்க ஐலஸா

வயலே நம்பி ஏலேலோ குடியிருக்க ஐலஸா
குடிய நம்பி ஏலேலோ கோனிருக்க ஐலஸா
கோனே நம்பி ஏலேலோ நாமிருக்க ஐலஸா
நம்மை நம்பி ஏலேலோ நதியிருக்க ஐலஸா

(நங்கூரத்தைக் கன்னிகையின் கழுத்தில் கட்டி நதியில் தள்ளி விடுகின்றார்கள். இரு சம்மனசுகளின் தோற்றம்.)

(பிலோமினம்மாள் நதிக்கரையில் சோர்ந்து கிடத்தல்.)

பாட்டு: (லாவி மெட்டு)

நம்பினவர்க் கடைக்கலமே நாயகியே தாயே
என் பாரந்தனே யகற்றி என்னைக் கரைசேர்த்த தாயே

அன்னாளிடம் ஜெனித்த ஆதிபரன் தாயே
என் னுத்துமந் தன்னையே யீடேற்ற வந்த தாயே

கல்லான மனம் படைத்த காதக னவ்வேந்தன்
பொல்லாத வாதையென்னால் பொருக்க சகியேனே தாயே.

(மூர்ச்சையாகுதல்.)

(ஓடக்காரர்கள் கரை சேர்ந்து திரும்பும் சமயம் ஒருவன் பிலோமினுளைக்கண்டு)

பாட்டு கட்டபொம்மு. மெட்டு

1. அண்ணு வாடா நீயும் தம்பி வாடா தம்பி வாடா இது
ஆச்சரியமா யிருக்குதடா.

(அடுத்தவன்) ஐயையோ

2 ராஜாவிடம் சொன்னால் கோவிப்பாரே கோவிப்பாரேஐயோ
நான் வரமாட்டேன்டா தம்பிமாரே

(எல்லோருமாக நெஞ்சில் அடித்துக்கொண்டு ஒருவருக்கொருவர் ராகம் போட்டு செல்லுகிறார்கள்.)

சீன் 21

(அரசன் குடிவெறியால் சாய்ந்து கிடக்கிருன். ஓடக் காரர்கள் வந்து)

மகாராஜா! கும்பிடுறோம். (இரண்டு மூன்று முறை)

தியோ:— . உம். உம். யாரடா நீங்கள்?

ஓடக்காரன்:— நாங்கதா ஓடக்கார னுங்கோ மவராசா.

தியோ:— என்னடா சொன்ன வேலையை முடித்தீர்களா? சரி போகலாம். — ஏனடா திரும்பவும் நிற்கிறீர்கள்?

(ஓடக்காரர்கள் ஒருவனையொருவன் தள்ளிக்கொண்டு)

ஓடக்:— மவராசா! ஒரு விண்ணப்பம். உத்திரவுப்புடியே செய்தோமுங்கோ. ——

தியோ:— நல்லது நீங்கள் போகலாம். உங்களுக்கு நமது பொக்கிஷதாரிடம் சொல்லி தகுந்த வெகுமதி கொடுக்கும்படி செய்கிறேன்.

ஓடக்:— (தங்களுக்குள்) ஐயையோ! அளவுக்கு மிஞ்சிப் போயிடுச்சே — இனியெப்படிச் சொல்றது. நீ சொல்லுடா — அடே அண்ணு நீயே சொல்லு — மாட்டவே மாட்டங்கிரே — நீ சொல்லுப்பா — அம்மாடி — (ஒருவன் உட்கார ஒருவன் எழுந்திருக்க — எழுந்தவன் உட்கார — உட்கார்ந்தவன் எழுந் திருக்க — போட்டியிடுகிருர்கள்.)

தியோ:— அடே! ஓடக்காரர்களே ஏன் இவ்வாறு போட்டி போடுகிறீர்கள். நான் தான் வெகுமதி கொடுப்பதாக சொன்னேனே.

ஓடக்:— (ஒருவன்) அதுக்கில்லிங்க மவராசா. (தலையை சொறிகிருன்.)

தியோ:— பின்பு என்ன? நடந்தவற்றை சொல்லு கின்றீர்களா — இல்லையா?

ஓடக்:— மவாராசா — சொல்லிட்ரோங்க — சொல்லிட் ரோங்க — உம் — ஓடத்திலே அந்த அம்மாளே வெச்சிக்கினு போனேமுங்க — நடுப்பரபோனதும் நீங்க சொன்னுப்லே செஞ் சிட்டோமுங்கோ மவாராசா — ஆனுக்க —

தியோ:— என்னடா ஆனுல்? அவளை ஆற்றில் தள்ளி னீர்களா இல்லையா?

ஓடக்காரர்:—

3. என்ன செய்வோ மெங்க ளாண்டவனே ஆண்டவனே இது
இந்திர ஜாலம்போலே யிருக்கு

4. மந்திரம் போடுரு மாயக்காரி யாயக்காரி அவள்
தந்திரம் செய்யுரு ஜாலக்காரி

தியோ:— அடே மடையர்களே! விபரமொன்றும் சொல்லாமல் என்னடா உளறிக்கொண்டிருக்கிறீர்கள்? நான் சொன்ன பிரகாரம் நங்கூரத்தைக்கட்டி ஆற்றில் தள்ளினீர்களா இல்லையா?

ஓடக்:— மவாராசா! நங்கூரத்தைக் களுத்திலே கட்டி உத்திரவுப்புடியே ஆத்துக்குள்ளே தள்ளீட்டோங்க ஆனுக்க மவாராசா!

5. நங்கூரம் போச்சுது ஆத்தினிலே ஆத்தினிலே அந்த
நாரியிருக்கிரு மேட்டினிலே.

தியோ:— பற்களை நற நற வெனக்கடித்து சவுக்கைக் கையிலெடுத்துக்கொண்டு

பாட்டு:— ஸ்ரீராகம். தாளம்: ஆதி.

பல்லவி.

அடடா மதிகெட்டுத் திரும்பிய மடையர்களே அவள்
ஆணுவக்தனைக் கண்டும் (அடடா)

அனுபல்லவி.

திடடாம்பிக முள்ள சேனைகளெதர்க்கு
தினையளவேனுமொரு துணைபுரியாது (அடடா)

சரணம்

ராஜ கட்டளையெல்லாம் பயனற்றதாச்சு
நாடுமுழுதுமிகக் கேவலமாச்சு
போஜனென்ற எனது புகழதும் போச்சு
புடைக்கப் புடைக்க சவுக்கடியைப் பெறுவீர் இதோ (அடடா)

(சவுக்கால் ஓடக்காரர்களை அடித்து)

மானிடப்பிணங்களே! அறிவு சற்றுமில்லாது அச்சமற்று என்னிடத்தில் வந்து நானிட்ட கட்டளையை நிறைவேற்றாது முறையிடத் துணிந்தீர்களா? இதற்காகவோ உங்களைநான் என் அரண்மனையில் வைத்திருப்பது? கேவலம் தூசிக்குச் சமானமுள்ள ஒரு பெண்ணின் செயலுக்கு எதிர்த்து நிற்க உங்களால் முடியவில்லையல்லவா? செல்லுங்கள் விரைவில் அந்தப்பெண் பேயை இழுத்துச்சென்று தூணிலே கட்டி அம்பால் எய்து கொல்லுங்கள். உம் சீக்கிரம்.

சீன் 22

(கற்றூணில் கட்டி வைத்து கன்னிகையை அம்பால் எய்தல்— ரத்த வெள்ளம் பெருக சோர்ந்து கீழே விழ சகலரும் செல்லுகிறார்கள்.)

(வான தூதர்கள் தோன்றி காட்சி கொடுத்தல்.)

வான தூதர் பாட்டு.

பஜனை செய்வோம் எ. வ. மெட்டு.

பல்லவி.

சுகுண சிரோண்மணி நீயே
துணையுனக் காகிடத் தூதர்கள் நாங்களே
துரிதமா யெழுந்தோமே. (சுகுண)

அனுபல்லவி

அகமது மெலிந்தாய் பரமதையடைவாய்
அம்பரன் திருவருளாலே
சுகமது மோக்ஷ ஸ்தலமதி லேயன்றி
சோதனைகளை ஜெயிப்பாயே ததி (சுகுண)

சரணம்.

பனிமயம் மாறும் பகலவன் முனமே
பசி துன்ப மனுபவிப்பாயே
கனிவுடன் உனது காயங்கள் மறைத்தோம்
பரிமள தைலத்தினாலே ததி (சுகுண)

(காக்ஷி மறைகிறது.) (மண்டியிட்டு)

பிலோ:— பாட்டு. ராகம் சாவேரி. தாளம் ரூபகம்.

பல்லவி.

அமல உற்பவியான அன்னை மரியே தாயே
அடியாளை யேற்க வொண்ணாதா (அம)

அ. பல்லவி.

சபல மிருந்த பொல்லா சண்டாளன் செய்யும் வாதை
சகிக்க முடியவில்லை தாங்கு வேனோ இத்தொல்லை (அம)

சரணம்

இருகப்பிடித்துக் கட்டி எய்தார் வில்லம்பு பாய
இங்கு மங்கும் சவுக்கால் என்னையடித்தார் மாய
மிருகம்போலே இழுத்தார் மேனி ரத்தமே தோய
மெய்யான மறை தன்னை ஐயோ தூஷணம் செய்ய (அம)

(அரசன் தோன்றி பிலோமினள் சுகமடைந்து மாசற்ற மேனியாய் இருப்பது கண்டு)

தியோ:— (கோபாவேசனாய்) ஹா! ஹா! இனியும் நான் பொறுக்கவோ? இவ்வளவு மாய வித்தைக்காரியை ஓர் புத்திரியாக பெற்றவனா அந்த கலிஸ்தோஸ்? இனி சகியேன். இவளையும் சும்மாவிடேன். இவளுடைய மாயவித்தையைக் கண்டு நான் சும்மா விட்டு விடுவேனாகில் எனக்குப் பெருத்த அவமானம் அல்லவா? இவ்வளவு தூரம் என் அதிகாரத்தைச் சின்னாபின்ன படுத்தி எதிர்த்துப் போராடும் இப்பெண்ணுருவைக் கொல்லாமல் விடேன். தாமதியேன் க்ஷணமும். தாளேன் என் மனம். வீரர்களே? உங்களது அம்புகளை நெருப்பில் பழுக்கக் காய வைத்து இவள் மீது எய்து கொல்லுங்கள். உம் ஆரம்பியுங்கள் தாமதிக்க வேண்டாம்.

பிலோ;— பாட்டு திருவடிசரணம் எ. வ. மெட்டு.

பல்லவி.

கருவுருவா யவதாரம் கொண்டீர் தேவாதி தேவா

அனுபல்லவி

ஒரு கொடி யிலிந்தக் கொடியர் மனம்திரும்ப
உள்ள மிறங்காதா சேசு நாதா கரு

சரணம்.

அடிக்கப் புடைக்கயென் அங்கங்குலையாதா
அனுபவித்த துயரம் இதுவரை போதாதா
மடிக்கத் துடிக்க வரும் அம்பும் அகலாதா
வாதை புரியுமவர் மீது திரும்பாதா கரு

(காய்ச்சி எய்யப்பட்ட அம்புகளெல்லாம் திரும்பி எதிர்த்து பாய சிலர் கீழே விழுந்து மடிய ஜனக்கும்பல் திரண்டு அரசனைத் தூற்ற அரசனுக்கு ஆங்காரம் பெருகி வெறி பிடித்தவன் போல் வாளை உருவி கன்னிகையின் சிரத்தை வெட்டுகிறான். மாசற்ற

பிலோமினுளின் ஆத்மா மேற்கிளம்பி ஜெகஜ் ஜோதியாய்ப் பிரகாசித்துச் செல்ல அதைக்கண்ட அரசன் நடுங்கி மயிர்க் கூச்சலுற தன் கரங்களால் தலை மயிரைப் பிடித்திழுத்துக் கொண்டவனுய் மயங்கி சுழன்று கீழே சாய்கிருன்.)

சீன் 23.

(மோக்ஷ லோகம் — வான மண்டலத்தில் அர்ச்சிஷ்ட பிலோமினம்மாள் பாக்கியவதியாய் விளங்குதல்.)

முற்றிற்று.

அர்ச். பிலோமினம்மாள் பேரில் ஸ்தோத்திரப் பாட்டு.

விருத்தம். (சங்கராபரணம்)

பாரிலே திலகம் போன்ற பவளவாய் கமலக் கண்ணாள்
நேரிலே திருமாதாவின் நேர்மையைக் கொண்ட பெண்ணாள்
ஊரிலே புகழ் கொண்டாடும் உத்தமியான விண்ணாள்
பேரிலே பிறந்தபெண்ணாள் பேய் தன்னை ஜெயித்த கண்ணாள்,

நிருபமான — எ. வ. மெட்டு.

பல்லவி.

வேத சாக்ஷி யான கன்னி
விமலக் கமல க்ரீட சென்னி (வேத)

அனுபல்லவி.

நீ தன்னீத வாதை ஜெயித்து
தேவ வரம்பெற்ற பூவை பிலோமினாள் (வேத)

சரணம்

நம்பி வந்தவர்க் கருள் தரும்மணி
நாயகி போன்ற கற்புக்கரசி நீ
அம்பர தேவனை ஏந்தியவள் நீ
ஆணுவங் கொண்ட ராயனை வென்ற (வேத)

அர்ச். பிலோமினம்மாளுக்கு ஜெபம்.

பூமியின் எல்லாதிக்கிலும் உமது நாமமும் அற்புதங்களும் புகழப்பட்டுள்ள மாட்சிமை தங்கிய கன்னிகையும் வேதசாட்சியுமான அர்ச். பிலோமினம்மாளே! உமது சலுகையில் நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையையும் பூலோக முழுமையும் உம்மைப் புகழ்ந்தேற்றும்படியான எங்கள் கோரிக்கையையும் தயையுடன பார்த்தருளும்.

பரமனின் திருநாமத்திற்கு மகிமையுண்டாகவும், திருச்சபையின் அபிவிர்த்திக்காகவும், உமக்கவரளித்திருக்கும் வல்லமையை நாங்களும் முடன் ஒன்றுசேர்ந்து அகமகிழ்ந்து, பரலோகத்தில் சர்வேஸ்வரன் சமுகத்தில் மேன்மையான பதவி நீர் பெறப் பாக்கியமுற்ற உமது கற்பின் தூய்மையையும், உதாரத்தையும், உமக்கு இரட்சகர் மீதுள்ள நேர்மையையும் அதி உன்னத வணக்கத்துடன் சிந்திக்கின்றோம்.

பரிசுத்த உம் சுகிர்தமாதிரியால் நாங்கள் தூண்டப்பட்டும், நீரடைந்த மகிமையுள்ள சம்பாவனையைக் கண்டும், தைரியமுற்று நாங்கள் சகலத்திலும் தெய்வ திருவுளத்திற் கமைந்து நடக்கவும், பாவத்தை முற்றிலும் விட்டொழிக்கவும், திடமான மனதுடன் பிரதிக்கினைச்செய்கின்றோம்.

புகழுற்ற அர்ச்சியசிஷ்டவளே! எங்களுக்குக் குன்றாத்தூய்மையையும், நமது சத்தியமறையின் இணையில்லா அன்பின் பெருக்கையும் சுவாமிக்காகயெதையும் பரித்தியாகஞ் செய்யவும், பின்னடையாதிருக்க களங்கமற்ற பரிசுததத்தை எங்கட்குண்டாக அருளும். (இங்கு அவரவர் கோரிக்கைகளைக் குறிப்பிடவும்.) கிருபை தயாபரரான கர்த்தருக்காயுமது உதிரத்தை நீர் சிந்தியதால் உமது வேண்டுகோளுக்கெதையுமவர் மறுத்திடார். இது திண்ணம்! — ஆமென்சேசு.

அர்ச். பிலோமினம்மாளே! எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.
(3. விசை.)

இந்த ஜெபத்தை ஜெபிக்கும் ஒவ்வொரு விசைக்கும் 50-நாள் பலன்.

அர்ச். பிலோமினம்மாள்

பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி தயையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள்பிரார்த்தனையை நன்றாகக்கேட்டருளும்.

பரமண்டலங்களிலே யிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,— எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

உலகத்தை மீட்டி ரட்சித்த சுதனாகிய சர்வேசுரா — எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா — எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா,— எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

வேதசாட்சிகளுக்கு இராக்கினியாகிய அர்ச். மரியாயே,

இராஜ புத்திரியான அர்ச். பிலோமினம்மாளே,

தேவவரங்களால் நிறைந்த அர்ச். பிலோமினம்மாளே,

உமது தாய் தகப்பனுடைய விசுவாசத்துக்குப் பலனாகப் பிறந்த அர்ச். பிலோமினம்மாளே,

பிரகாசப் புத்திரியாகிய அர்ச். பிலோமினம்மாளே,

சிறுபத்திலேதானே சேசுநாதர் சுவாமிக்கு உமது கன்னிமையை ஒப்புக்கொடுத்த அர்ச். பிலோமினம்மாளே,

திவ்விய கர்த்தருக்கு மாறாத கற்புள்ள பத்தினியாகிய அர்ச். பிலோமினம்மாளே,

பரிசுத்த தேவமாதாவுடைய புண்ணியங்களின் தூய கண்ணாடியாகிய அர்ச். பிலோமினம்மாளே,

உலக சுகசெல்வ சிலாக்கியத்தை அனுசரிக்காதபடிக்கு எப்போதும் எச்சரிக்கையாயிருந்த அர்ச். பிலோமினம்மாளே,

உமக்கு அதிகப் பிரியமான நேச பற்றுதலை எல்லாம் உதாரமாய்ச் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்த அர்ச் பிலோமினம்மாளே,

இவ்வுலக இராஜாங்கத்தைவிட பரலோக நன்மைகளை விரும்பின அர்ச். பிலோமினம்மாளே,

திவ்விய கர்த்தருக்குப் பிரமாணிக்கத் தப்பு செய்யாத படிக்குச் சக்கரவர்த்தியான இராயன் விவாகத்தைப்புறக்கணித்த அர்ச். பிலோமினம்மாளே,

தேவ துரோகமாகும் அந்த விவாகத்துக்கு உம்மை உடன்படுத்தப் பிரயாசைப்பட்ட உமது தாய் தகப்பனுடைய கண்ணீராலும் மன்றாட்டினாலும் மனங் கலங்காத அர்ச். பிலோமினம்மாளே,

அக்கொடிய இராயன் காட்டின நேசமும் பயங்காமுஞ் சட்டை பண்ணாத அர்ச். பிலோமினம்மாளே,

அந்தத்துஷ்ட இராயன் உமக்குச் செய்த தந்திரமெல்லாம் ஜெயித்து உமது கற்பைப் பழுதில்லாமற் காப்பாற்றின அர்ச். பிலோமினம்மாளே,

உமது விசுவாசத்தையுங் கற்பையுங் காப்பாற்றுதற்குத் தத்தளியாமல் பிராணனைக் கொடுக்கத் துணிந்த அர்ச். பிலோமினம்மாளே,

நாற்பது நாள் சிறைச்சாலையில் விலங்கோடே கிடந்து பசி தாகம் அனுபவித்த அர்ச். பிலோமினம்மாளே,

அந்தச் சிறைச்சாலையில் தேவ மாதாவின் தரிசனையால் அதிக தைரியமும் ஆறுதலும் அடைந்த அர்ச் பிலோமினம்மாளே,

உமது திவ்விய பர்த்தாவைப்போலே கற்றூணிலே கட்டுண்டு வெகுவாய் அடிபட்ட அர்ச். பிலோமினம்மாளே,

அடி மிகுதியினால் சர்வாங்கமும் ஏக காயமான அர்ச். பிலோமினம்மாளே,

சிறைச்சாலையில் உமக்குத் தரிசனையான சம்மனசுக்களால் காயமெல்லாஞ் சொஸ்தமாக்கப்பட்ட அர்ச். பிலோமினம்மாளே,

உமது கழுத்தில் கட்டுண்ட நங்கூரத்தோடே தீபரென்னும் நதியில் அமிழ்த்தப்பட்ட அர்ச். பிலோமினம்மாளே,

அற்புதமாய் சம்மனசுக்களால் தூக்கிக் கரையிற் கொண்டு போகப்பட்ட அர்ச். பிலோமினம்மாளே,

உரோமாபுரி வீதிகளில் இழுக்கப்பட்டுத் திரளான அம்புகளால் எய்து ஊடுருவப்பட்ட அர்ச். பிலோமினம்மாளே,

திரளான இரத்தம் சிந்திச் சாகிற தன்மையாயிருக்கிற போது மறுபடி சிறைச்சாலையில் அற்புதமாய் சொஸ்தமடைந்த அர்ச். பிலோமினம்மாளே,

அக்கினிமயமான அம்புகளுக்கு தேவகிருபையால் எட்டாத வளான அர்ச். பிலோமினம்மாளே,

உமது பேரில் எய்யப்பட்ட அம்புகள் உம்மை எய்தவர்களின் பேரில் திரும்பிப்படும்படி வரம்பெற்ற அர்ச். பிலோமினம்மாளே,

இந்த அற்புதத்தினாலும் உமது மாறாத பொறுமை தைரியத்தினாலும் அநேகம் அக்கியானிகளுடைய மனதைத்திருப்பின அர்ச். பிலோமினம்மாளே,

உமது சிரசை வெட்ட வந்த கொலைக்காரர்களுக்கு தைரியமாய்ச் சாய்த்துக்கொடுத்த அர்ச். பிலோமினம்மாளே,

இப்படிக் கன்னிமையின் முடியையும், வேதசாட்சியின் முடியையும் பெற்றுக்கொண்ட அர்ச். பிலோமினம்மாளே,

இக்காலங்களில் பற்பல அற்புதங்களால் பிரபலியமான அர்ச். பிலோமினம்மாளே,

அசாத்திய வியாதிக்காரர்களுக்கு ஆரோக்கியந் தந்தவளாகிய அர்ச். பிலோமினம்மாளே,

துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதலாகிய அர்ச். பிலோமினம்மாளே,

தரித்திரர்களுக்கு அடைக்கலமும் உதவியுமாகிய அர்ச். பிலோமினம்மாளே,

உம்மை மன்றாடுகிறவர்களுக்கு ஆதரவும் ஒத்தாசையுமாகிய அர்ச். பிலோமினம்மாளே,

பரிசுத்த தேவமாதாவுக்கு மிகவும் உகந்தவளாகிய அர்ச். பிலோமினம்மாளே,

இளம்பிராயத்தில் உலகம் பசாசு சரீரத்தை ஜெயித்து வேதனைகளுக்கு அஞ்சாத வேத சாட்சியான அர்ச். பிலோமினம்மாளே,

பரலோகத்தில் அத்தியந்த பேரின்ப மகிமை பாக்கியம் அடைந்த அர்ச். பிலோமினம்மாளே,

விசுவாசத்துக்காவது கற்புக்காவது துரோகஞ் செய்கிற நிர்ப்பாக்கியத்தினின்று,—அர்ச். பிலோமினம்மாளே எங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்.

உலகத்தின் பொய் நன்மைகளாலும் அதின் வீண் சுகசெல்வ சிலாக்கியங்களினாலும் வருகிற துராசையினின்று, — அர்ச். பிலோமினம்மாளே எங்களைக் காப்பாற்றிக்கொள்ளும்.

உலகத்தின் ஊழியத்தைப்பற்றித் தேவ ஊழியத்தை அசட்டையாய் விடுகிற நிர்ப்பாக்கியத்தினின்று, — அர்ச்.

பிலோமினம்மாளே எங்களைக்காப்பாற்றிக் கொள்ளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,— எங்கள் பாவங்களைப் போக்கி யருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,— எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயை பண்ணி இரட்சியுஞ் சுவாமி.

பிரார்த்திக்கக்கடவோம்.

சகல நன்மைகளுக்குங் காரணரா யிருக்கிற சர்வேசுராசுவாமி! அர்ச். பிலோமினம்மாளிடத்தில் ஆச்சரியத்துக்குரிய புண்ணியங்களை விளங்கச்செய்து இக்காலங்களில் அவளை எண்ணிறந்த அற்புதங்களால் கனப்படுத்தினீரே! அவள் பாவனையாக அடியோர்கள் இவ்வுலக சகல நன்மைகளைவிடப் பரலோக நன்மைகளைப் பெரிதாய் எண்ணிப் பிரமாணிக்கமாய்க் கற்பையுஞ் சத்தியவேத விசுவாசத்தையுங் காப்பாற்றிப் பேரின்ப இராச்சியத்திற் சேரும்படியாக அநுக்கிரஞ் செய்தருளுஞ் சுவாமி.

அர்ச். பிலோமினம்மாளே! எங்களுக்கு அவசரமான வரப்பிரசாதங்களை அடியோர்களுக்குப் பெறுவிக்க உம்மை மன்றாடுகிறோம். கிருபாசமுத்திரமாகிய சர்வேசுரனிடத்திலுங் கன்னியர்களுக்கும் வேதசாட்சிகளுக்கும் இராக்கினியாகிய அர்ச். கன்னிமரியம்மாளிடத்திலும் உமக்குக் கிடைத்த சலுகையின் பேரில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு உமது மன்றாட்டின் உதவியால் நடந்த திரளான அற்புதங்களை அறிந்திருக்கிறோம். இப்போது நீர் அத்தியந்த பாக்கியம் அநுபவிக்கிற பரலோக இராச்சியத்தினின்று தயை இரக்கக் கிருபா கடாட்சத்தோடே எங்களை நோக்கியருளும்,

எங்கள் நேசமாகிய சேசுவே! வாழ்க. எங்கள் நம்பிக்கையாகிய அர்ச். மரியாயே! வாழ்க. கன்னியும் வேத சாட்சியுமாகிய அர்ச். பிலோமினம்மாளே வாழ்க. ஆமென்சேசு.

PRINTED AT THE MARUTHI PRINTING WORKS, KULITALAI.

MARUTHI PRINTING WORKS
PRINTERS,
&
BOOK BINDERS,
ETC
KULITHALAI. TRICHY. DT.